மாலைமணி

ஆசிரியர்

பி.எஸ்.இளங்கோ

600 078.

முதலாண்டு
சிறப்பிதழ்
(விலை ௩௦ காசு)

Tathy..

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 1—11—1959 | ஒலி 1

முதலாண்டு சிறப்பிதழ்

மாலைமணி தனது ஓராண்டு வெற்றிப் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று இரண்டாவது ஆண்டின் துவக்கத்திலே அடியெடுத்து வைத்திருக்கிறது!

தமிழ்ப் பெருங்குடி மக்களையெல்லாம் தட்டி எழுப்பி—தமிழ்ப் பெருங்குடி மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் இலட்சிய கீ மிசைத்து, திராவிடத்தின் அடிமைத் தளையை ஒடிக்க விடுதலை நாதம் முழங்கி, நாட்டிற்கு நல்ல பணிபுரிந்து வரும் இந்த ஏட்டிற்கு இன்று வயது ஒன்று நிறம்புகிறது! இந்த வெற்றிச் செய்தி உங்களையெல்லாம் மகிழவைத்து களிப்பு கடலில் ஆழ்த்துவதைப் போலவே எங்களையும் மகிழ வைத்து பூரிப்படைய வைத்திருக்கிறது!

பெரியார் ராமசாமி அவர்களிடமிருந்து பிரிந்து நாம் திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட நேரத்தில்—கழகத்தின் இலட்சியங்களை எடுத்துச் சொல்லுவதற்காக, கழக கருத்துகளை நாடெங்கும் பரப்புவதற்காக—நமது அறிஞர் அண்ணா அவர்கள் இந்த ஏட்டை திரு. டி. எம். பார்த்தசாரதி அவர்களைக்கொண்டு தின ஏடாக துவக்கினார்கள்!

தமிழ் உலகப் பெருந் தலைவன், அறிவுலக மேதை அறிஞர் அண்ணா அவர்களின் ஆற்றல் மிகு செயலால், அற்புத எழுத்து சக்தியால் திராவிடப் பெருங்குடி மக்களை யெல்லாம் கவர்ந்து, வெற்றி வாகை சூடிற்று!

அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்பு நமது நாவலர் நெடுஞ்செழியன் ஆசிரியர் பொறுப்பேற்று மாலைமணியின் மூலம் நாடெங்கும் விடுதலை ஓசையை முழங்கி வந்தார்!

நமது நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பின்பு கலைஞர் கருணாநிதி இந்த ஏட்டின் மூலம் நாட்டிற்கு நல்ல பணிகளை செய்து வந்தார்! அதற்குப் பின்பு இராதாமணாளன் பொறுப் பேற்றுக்கொண்டு இளைஞர்களுக்கு விடுதலை தாகத்தை ஊட்டி வந்தார்!

பத்திரிகைகளுக்கெல்லாம் இயற்கையாக வரும் நோய் மாலைமணியையும் பற்றிக்கொண்ட காரணத்தால் இந்த ஏடு நிறுத்தப்பட்டது!

அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுக் கருத்துகளைத் தாங்கி வந்த அந்த ஏட்டை, அறிவுலக மேதையால் புகழாரம் சூட்டிக் கொண்ட அந்த ஏட்டை மீண்டும் துவக்குவதென முடிவு செய்தோம்! அந்த முடிவு செயல் வடிவாகி—சென்ற 1958-ம் ஆண்டு நவம்பர் திங்கள் இரண்டாம் நாள் முதல், மாலைமணி மீண்டும் தமிழகத்திலே ஒலிக்க ஆரம்பித்தது! மக்களுடைய பேராதரவால் வளர்ந்து இன்று முதலாண்டு சிறப்பிதழையும் வெளியிட்டு, களிப்புக் கடலிலும் மூழ்கிக் கிடக்கிறது!

மாலைமணி துவக்கப்பட்ட நேரத்தில் நாங்கள் என்ன உறுதிமொழியை அளித்தோமோ அதே உறுதி மொழியை கடைசிவரையில் கடைப்பிடித்து இலட்சியக் கருத்துகளைப் பரப்பி வருவோம்! அறிஞர் அண்ணா அவர்களுக்கு இருக்கிற ஆற்றல், திறமை எங்களுக்கு நிச்சயமாகத் துளியும் கிடையாது! அறிஞர் அண்ணா அவர்களைப்போல் எங்களால் எழுத முடியாது, எங்களால் செயல்படுத்த முடியாது, மக்களுடைய பேராதரவையும் திரட்ட முடியாது! எங்களால் மட்டுமல்ல வேறு எவராலேயுமே முடியாது! அவருடைய ஆற்றலே ஒரு தனி ஆற்றல்; அவருடைய திறமையே ஒரு தனித் திறமை! அவருக்கு ஈடு அவரேதான்!

ஆனால் அவருடைய இலட்சியப் பாதையில், எத்தகைய எதிர்ப்புகள் வரினும் அவற்றையெல்லாம் துச்சமென மதித்து, எதிர்ப்புகளையெல்லாம் தூள் தூளாக்கிக்கொண்டு முன்னேறுவோம்! இளைஞர்களின் உள்ளங்களைக் கவர்வோம்! திராவிடத்தையும் பெறுவோம்!

இதுவரையில், நம்முடைய பெருந் தலைவர்கள் பணிபுரிந்த ஏடு என்பதை மனதில் கொண்டு—அவர்களுக்கு ஒரு துளியும் மாசு ஏற்படாமல், இழுக்கு வராமல், பொறுப்புணர்ச்சியோடு பணி புரிந்து வந்திருக்கிறோம் என்பதை அனைவரும் அறிவார்கள்! இனியும் அப்படியே பணிபுரிந்து அவர்களுக்கும், அவர்கள் வழியில் தோன்றிய எங்களுக்கும்—பத்திரிகை உலகிலும், மக்கள் மத்தியிலும் நல்ல பெயரை வாங்கித் தருவோம்!

இந்த ஓராண்டு காலத்தில் மாலைமணி பெற்றிருக்கிற வளர்ச்சி, மக்களிடையே பெற்றிருக்கிற செல்வாக்கு, இளைஞர்களிடையே அடைந்திருக்கிற மதிப்பு இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற போது—யாருக்குமே ஏற்படாத மகிழ்ச்சி, இதுவரை எவருக்குமே கிடைக்காத பெருமை, புகழ் எங்களுக்கு கிடைத்து விட்டதாகவே எண்ணுகிறோம்! பூரிப்படைகிறோம்! பேரானந்தம் கொள்ளுகிறோம்!

இத்தனைக்கும் பெரும் செல்வங்களைக் கொட்டி இந்த செல்வாக்கைப் பெறவில்லை! நம் அருமை அண்ணா அவர்கள் தந்த இலட்சியச் செல்வங்களைத்தான் முதலாக வைதது இந்த ஏட்டைத் துவக்கினோம்! நாட்டு மக்களுடைய நல்லாதரவையும் பெற்றோம்! இன்று நாடு வாழ்த்துகிறது—மாலைமணியை மக்கள் வரவேற்கின்றார்கள்!

இந்த ஓராண்டு காலத்தில் மாலைமணி பலப்பல பணிகளிலே ஈடுபட்டுப் பணிபுரிந்து வந்திருக்கிறது!

சென்னை நகர சபைத் தேர்தலின்போது மாலைமணி செய்த பணி நாடு நன்கு அறியும்! 'இது நகர சபைத் தேர்தலுக்காக துவக்கப்பட்ட ஏடோ'' என்று கூட சிலர் நினைத்தனர்!

காங்கிரஸ்காரர்களால் பெரும் தலைவர்கள் என்று மதிக்கப்படும் கனம் காமராஜா, கனம் சுப்பிரமணியம், கனம் கக்கன்ஜீ போன்றவர்களின் பொய்ப் பிரச்சாரத்தை நாட்டு மக்களுக்கு அம்பலப் படுத்தி, அவர்களுக்கும் உடனுக்குடன் நல்ல பதிலையும் சொல்லி வந்தோம்! அமைச்சர்கள், காந்தியவாதிகள் நம்மீது தாக்குதல் பாணங்களை வீசி யெறியும் போதெல்லாம் அவற்றை கண்டதுண்டமாக முறித்தெறிந்து வந்திருக்கிறோம்!

நம் தலைவர்களின் கருத்து நிறைந்த சொற்பொழிவுகளை வெளியிட்டு, நாட்டு மக்களுக்கு நல்ல விடுதலை உணர்ச்சியை ஊட்டி வந்திருக்கிறோம்! இனியும் இந்தப் பணியை தொடர்ந்து செய்து வருவோம்!

"வியாபாரம் செய்து வளம்பெற வேண்டும், அதனால் நல்ல சொகுசு வாழ்க்கையை நுகர வேண்டும், என்று நினைத்து இந்த ஏட்டைத் துவக்கவில்லை! இந்தத் தொழிலில் அதைப் பெறவும் முடியாது!

இந்த ஏடு துவக்கப்பட்டது எங்களது ஏற்றத்திற்காக அல்ல—நாட்டின் முன்னேற்றத்திற்காக, நாட்டு மக்களின் நல் வாழ்வுக்காக திராவிடத்தின் விடுதலைக்காக! அதுவே எங்கள் வாழ்க்கைப் பணி! அதுவே எங்கள் உயிர்ப்பணி! இறுதி வரை இதற்காக பணி புரிந்து நாட்டை மீட்போம்! இந்த உறுதியோடு இந்த இரண்டாம் ஆண்டின் முதல் இதழையும் உங்களிடம் படைக்கிறோம்!

உங்கள் கரங்களிலே மாலைமணியின் முதலாண்டு சிறப்பிதழ் தவழ்ந்து விளையாடுகிறது! அதைக்கண்டு நீங்களும்—உங்களைக் கண்டு நாங்களும் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்று பெருமிதம் கொள்ளுகிறோம்!

இந்த சிறப்பிதழ் மாலைமணியின் முதலாண்டு சிறப்பிதழ் என்று கூறுவதைவிட—"சென்னை மாவட்டத்து மாநாட்டு மலர்" என்று கூறுவதே பொருந்தும்! மாலைமணியின் பெருமையை, மாலைமணியின் சாதனையை, மாலைமணியின் பிரதாபங்களை எடுத்து விளக்கி மலர் வெளியிடுவதைவிட மாநாட்டு நிகழ்ச்சிகளை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதே பெருமையாக நினைத்து, இதனை வெளியிடுகிறோம்!

மிக குறுகிய காலத்தில் மாலைமணி, மக்களின் செல்வாக்கை ஏராளமாகப் பெற்றிருக்கிறது! அதைக் கண்டு பெருமையும், பூரிப்பும் கொள்ளுகிறோம்!

மாலைமணியை வரவேற்று, ஆதரித்து வளர்த்த எல்லா நண்பர்களுக்கும் நாங்கள் நன்றி செலுத்திட கடமைப்பட்டிருக்கிறோம்!

மாலைமணியின் வளர்ச்சிக்கு உயிராக விளங்கிடும் வாசக நண்பர்களுக்கும், மாலைமணியின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டுள்ள விற்பனையாளர்களுக்கும் எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

மாலைமணி என்ற பெயரைச் சூட்டி மக்கள் மத்தியிலே பெரும் புகழைத் தேடித் தந்த எழுத்துலக வேந்தர், அறிவுலக மேதை, நாவரசர், தமிழகத்தின் பெருந் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்! உங்கள் கட்டளை எதுவானாலும், உங்கள் ஆணை எதுவானாலும்—அது உயிராக இருந்தாலும், அதையும் தத்தம் செய்து தருவோம் என உறுதிமொழி கூறி—"எங்களை வாழ்த்துங்கள், எங்களுக்கு தியாக உணர்வை ஊட்டுங்கள்" என்று அறிஞர் அண்ணா அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்! கழகத்திற்கு ஏடு இல்லாத நேரத்தில் இந்த ஏட்டைத் துவக்கிய நண்பர் டி. எம். பார்த்தசாரதியை நாம் என்றும் மறக்கமுடியாது! அவருக்கும் எங்கள் நன்றி!

திராவிடப் பெருங்குடி மக்களே! விடுதலை வீரர்களே! வாசக நண்பர்களே! "மாலைமணி உங்களது ஏடு! அதை வாழ்த்துங்கள், அதை வளரச் செய்யுங்கள்" என்று பணிவன்போடு வேண்டிக் கேட்டுக் கொண்டு மீண்டும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

நாம் வளர்கிறோம், வளர்ந்து கொண்டே வருகிறோம்! ஆனால் நாம் வளர்ந்தது போதாது, இன்னும் வளர வேண்டும்!

மாற்றார்கள் வீழ்கின்றனர், வீழ்ந்து கொண்டே இருக்கின்றனர்! ஆனால் அவர்கள் வீழ்ந்தது போதாது, இன்னும் வீழ வேண்டும்!

ஏச்சாலும், பேச்சாலும் நம்மை அழித்து விட முடியாது!

மாநாட்டில்

பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் வீர உரை!

மாநாட்டு தலைவரவர்களே! பிரதிநிதிகளே! மதிப்பிற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! அன்பிற்குரிய தோழர்களே! சென்னையிலே கூட்டப்படும் மூன்றாவது மாநாடாகிய இந்த மாநாடு நேற்று காலை ஆரம்பித்து சீரும் சிறப்புடனும், உணர்ச்சியும் எழுச்சியுடனும் மிக அழகுற நடந்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த பத்து ஆண்டுகாலமாக எவ்வளவு வலிவோடும் பொலிவோடும் வளர்ந்து வருகிறதென்று நாடாள வந்த ஆளவந்தார்களும் அறியத் தொடங்கி விட்டார்கள். 1951-ஆம் ஆண்டிலே முதல் மாநில மாநாட்டை நடத்தினோம். நாட்டு மக்கள் ஆதரவை கண்டு களித்தோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் நாளுக்கு நாள் வளர்ச்சியுற்று வருகின்ற நிலையிலே உள்ளதே தவிர வீழ்ச்சியுறுகின்ற நிலைமையில் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் தனது லட்சியங்களையும் கொள்கைகளையும் ஏடுகளின் மூலமும், சொற்பொழிவுகளின் மூலமும் நாட்டு மக்களிடையே பரப்பி நாட்டு மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெற்று வருகிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடம் பிரிய வேண்டுமென்பதற்கான சரித்திர பூர்வமான சான்றுகளையும், ஆதாரங்களையும் புள்ளி விவரங்களையும் எடுத்துக் கூறி வருகிறது. இப்படி நாம் எடுத்துக் கூறும் ஆதாரங்களும், சான்றுகளும் நேர்மையை கடை பிடித்தவைகளாக உள்ளன. நாம் எடுத்துக்கூறும் சான்றுகளையோ காரண காரியங்களையோ மறுத்துக் கூற முடியவில்லை. நமது வாதங்களுக்கு மாற்று வாதங்கள் கூறமுடியவில்லை. இதற்குப் பதிலாக வசை மொழிகளும், இழி சொற்களுமே கிடைக்கின்றன. ஆட்சியாளர் நம்மை இழிச் சொற்களாலும், பழிச் சொற்களாலும் ஒழித்துக் கட்டி விடலாம் என்று நினைத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட பழிச்சொற்களையும் இழி சொற்களையுமே எடுத்துக் கொண்டு நம்மைப் பற்றி கணக்குப் போட்டு வருகின்றனர். இந்தக் கணக்கில் அவர்கள் நீடூழி வாழட்டும். அவர்கள் போடுகின்ற தப்பு கணக்கு நமக்கு லாபக் கணக்கே தவிர நட்டக் கணக்கல்ல. களத்திலே வருகின்ற எதிரி தப்புக் கணக்குப் போட்டு வருவானாகில் அது நமக்கு லாபக்கணக்காக முடியுமே தவிர நட்டக் கணக்காகாது. மாற்றான் நம் பலத்தைப் பற்றியும், இவர்களது பலம் இவ்வளவு பலம் இப்படிப் போரிட்டால் நாம் நமது பகைவரை வெல்லலாம் என்று சரியான கணக்குப் போட்டு வருவானாகில் அது நமக்கு அச்சத்தையூட்டும்.

ஆட்சியாளர் சொல்வார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவே இல்லை. அவர்கள் பேசும் அடுக்கு மொழிக்கு மகிழ்ந்தவர்களே அவர்களது கூட்டத்திற்குப் போகிறார்கள். அவர்களது கொள்கைகளை உள்ளன்போடு ஏற்றுக்கொண்டவர்கள் இல்லை. அவர்களுக்கு ஆதரவு இல்லை என்று கூறி வருகின்றனரே தவிர நாம் எடுத்துக் கூறும் காரண காரியங்களை மறுத்துக் கூறினார்களா என்றால் இல்லை. அவர்கள் நாம் கூறும் வாதங்களுக்கு எதிர்த்து வாதம் புரிவார்களா என்றால் அவர்கள் நம்மை மீறித் துவக்குபவர்கள் அல்ல நாம் எதிர்ப்பதிலே (Offensive) உள்ளவர்கள் அவர்கள் காத்துக் கொள்வதிலே (Defensive) இருப்பவர்கள். நம் முன்னேற்றத்தை தடைப் படுத்துவதில் அவர்கள் முனையலாம். அப்படிப்பட்ட முனைப்பிலே அவர்கள் வெற்றி பெறலாம். அப்படிப்பட்ட நேரத்திலே நமது முன்னேற்றம் தடைபடலாம். எவ்வளவு நேரம் தடை படலாம். சில வினாடிகள் தடைபடலாம் சில மணி நேரம் தடை படலாம். சில நாட்கள் தடை படலாம். நம்மை இழித்துப் பேசுவதாலும் நமது கழகம் அழிந்து விடாது, ஒழிந்து விடாது. எதிர்ப்பவர்கள் எண்ணிக்கை குறையத் தான் செய்யும். பத்து ஆண்டு காலத்தில் கழகம் நல்ல வளர்ச்சி பெற்றிருக்கிறது. இப்போது நமது கழகக் கொடி பறக்காத சிற்றூர் இல்லை. கழகத்தின் படிப்பகம் இல்லாத இடம் இல்லை. கழகத்திற்காக பொருளுதவி



10-ம் பக்கம் பார்க்க

நம் உத்தம தியாகிகளை நினைப்போம்! அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவோம்!

காலிழந்து, கர மிழந்து, உயிரையே தத்தம் செய்துகொடுத்த வீரர்கள் பலர்!

அவர்கள் சிந்திய ரத்தம் தான் நம்மை வளர்த்தது!

அந்த தியாகத்தை நாமும் செய்வோம் - நாட்டை மீட்போம்!

மறைந்த மாவீரர்களுக்கு அண்ணா செலுத்திய வீர வணக்கம்!



அன்பு தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே! கடந்த இரண்டு நாட்களாக இவ்வளவு சீரும் சிறப்புமாக நடைபெற்று வரும் இந்த மாநாட்டில் இன்று இரவு தம்பி கருணாநிதியின் நாடகத்தை திருச்சி கோவிந்தசாமி... டியார் நடித்து உங்களை களிப்புறச் செய்ய இருக்கிறார்கள்,

"இங்கே போடப்பட்டிருக்கும் இவ்வளவு அலங்காரமான பந்தலையும் கூடியிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களையும் காணும் போது இதே இடத்தில் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு 1952-ல் நடைபெற்ற முதல் மாநில மாநாடு நினைவுக்கு வருகிறது. இதே இடத்தில் நடத்தப்பட்ட முதல் மாநில மாநாட்டிற்கும் இந்த மாநாட்டிற்கும் என்ன வித்தியாசம் என்பதைப் பற்றித் தான் எனது நண்பர்களுடன் நான் பேசிக்கொண்டிருந்தேன்! பெரிய வித்தியாசம் இருப்பதாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள்,

இதே இடத்தில் நடத்தப்பட்ட முதல் மாநில மாநாட்டிற்காகப் போடப்பட்ட பந்தலின் நீளம் 300 அடியும் அகலம் 200 அடியுமாகும்! இப்போது இந்த மாவட்ட மாநாட்டிற்காக போடப்பட்டிருக்கும் பந்தலின் நீளம் 500 அடியும் அகலம் 300 அடியுமாகும்! இந்த மாநாட்டிற்காகப் போடப்பட்ட பந்தலின் அளவு பெரியது என்ற காரணத்தால் மட்டும் இந்த மாநாட்டை சிறப்பானதென்று சொல்லவில்லை! ஏழு ஆண்டு காலத்திற்கு முன் இதே இடத்தில் நாம் நடத்திய மாநாடு மாநில மாநாடு இப்போது நடத்துவதோ மாவட்ட மாநாடு தான் ஏழு ஆண்டு காலத்திற்குமுன் மாநில மாநாட்டை கூட்டிய இடத்தில் இன்று மாவட்ட மாநாட்டை நடத்துகிறோம்! இது எதைக் காட்டுகின்றதென்றால் கடந்த ஏழு ஆண்டு காலத்தில் நல்ல வளர்ச்சியை அடைந்திருக்கிறோம் என்பது தெரிகிறது.

முதல் மாநில மாநாட்டில் செலவு போக கிடைத்த மிச்சம் 30,000 ரூபாய்! இந்த மாவட்ட மாநாட்டிற்கு நுழைவுக் கட்டணத்தின் மூலம் மட்டும் கிடைத்ததொகை 30,000 ரூபாய் மொத்தம் வசூலான தொகை 50,680 (ஐம்பதினாயிரத்து அறுநூற்றி எண்பது)! இதில் நன்கொடை மூலம் 9000 ரூபாயும், கடைகள் விடுதிகள் வைப்பதற்கான கட்டணமாக வாங்கப்பட்ட தொகை மூலம் வசூலானது 4 915 ரூபாயு , பிரதிநிதிகள் மூலம் 360 ரூபாயும், மற்றும் வரவேற்புக் குழுவினர் மூலம் வந்த தொகை எல்லாமாக சேர்த்து 50.680 ரூபாய் வசூலாகியுள்ளது. இதில் செலவு சுமார் ரூபாய் 20,000 (ரூபாய் இருபதினாயிரம்) போக மிச்சப்பட்டது 30,680 ரூபாய்! இந்த தொகையுடன் நமது புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் நன்கொடையாக ரூபாய் 5000 (ஐயாயிரம் ரூபாய்) கொடுத்து 35,680 ரூபாயாக உயர்த்தியுள்ளார்,

முன்னைய நிலையையும் இன்றைய நிலையையும் ஒப்பிட்டுக் காட்டவே நான் இங்கு பழங்கணக்கையும். புதுக்கணக்கையும் ஒப்படைத்தேன்.

ஏழு ஆண்டு காலத்திலே மாநில மாநாடு நடத்திய இடத்திலே மாவட்ட மாநாடு நடத்தும் அளவுக்கு நமது கழகம் வளர்ந்திருக்கிறது இதே நேரத்தில் இதை விடப் பெரிய பந்தலில் அடுத்த மாநில மாநாடு எவ்வளவு சீரும் சிறப்புமாக நடைபெற விருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும் போது நமக்கெல்லாம் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

நாம் அடைந்துள்ள வளர்ச்சி கண்டு அருவெறுப்பும் ஆத்திரமும் அடைகிறார்கள். அப்படி அவர்கள் தூற்றுவது — நாம் மறந்ததை யெல்லாம் கவனப் படுத்துகிறதே யொழிய வேறு ஒன்றும் இல்லை! அதனாலே தான் நாம் மாநில மாநாட்டில் பார்த்ததை மாவட்ட மாநாட்டில் பார்க்கிறோம்.

7-ம் பக்கம் பார்க்க

சென்னை அமைச்சர்கள் வெறும் கார்ட்டூன் பொம்மைகள்!

அந்த வடநாட்டு ஏஜண்டுகள் தான் நம்மைத் தாக்குகிறார்கள்!

ஆதிக்க மனோபாவம் அங்கே! அடிமை புத்தி இங்கே!

வடக்கு, தெற்கு துவேஷத்தை வடவர்கள் தான் வளர்க்கிறார்கள்!

திராவிட அரசு மலர அனைவரும் பாடுபடுங்கள்!

சென்னை மாநாட்டில் சம்பத் கர்ஜனை!

அன்புமிக்க தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே! என்னை, "திராவிட அரசு" என்ற தலைப்பின் கீழ் பேசுமாறு பணித்திருக்கிறார்கள்!

எனக்கு முன்பு பேசிய மேயர் அரசு வர இருக்கின்ற "திராவிட அரசு"க்கு முன்னோடியாகத் திகழ்கின்றார் என்றே கூறவேண்டும்!

சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த நண்பர்கள் அனைவரும் இந்த மாநாட்டை எழில் ததும்பும் வகையில் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள்! எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்ற மாநாட்டை விட இந்த மாநாடு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், சிறப்பாகவும் அமைந்துள்ளது! இந்த மாநாட்டில் எழும்புகிற ஆர்வம், உற்சாகம், உத்வேகம்—இந்த மாநாட்டிலே இருக்கின்ற எழில் இந்த மாநாட்டிலே காணப்படுகின்ற பூரிப்பு எல்லாம் தனிச் சிறப்பு வாய்ந்தவைகளாகும்! இதைக் கண்டு நான் மிக மிக பெருமிதம் கொள்ளுகிறேன்!

சென்னை மாவட்டம் தான் திராவிடத்தின் பெரும் பொறுப்பை ஏற்றிருக்கிறது! சென்னை நகர ஆட்சிப் பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்! இது வருங்கால "திராவிட அரசு"க்கு மெத்த வழி காட்டியாக இருக்கும் என்றே எண்ணுகிறேன்! திராவிட விடுதலைப் போரிலே பங்கு கொண்டிருக்கிற நமக்கு, சென்னை நகராட்சி, நல்ல வழிகாட்டியாக அமைந்துள்ளது! இதைக் கண்டு பெருமிதமும், பூரிப்பும் கொண்டுள்ள இந்த நேரத்தில் தான் இங்கே மாநாடும் நடைபெறுகிறது! இப்படிப்பட்ட மாநாடு நடைபெறுவது மக்களை விழிப்படையச் செய்யவும், மக்களை எழுச்சி பெற வைக்கவும், "திராவிட அரசு" என்ற நமது இலட்சியத்தை அடையவும் வழிவகை செய்யும்!

நாம், நம்முடைய இலட்சியத்தில் உறுதியான நம்பிக்கை வைத்து பணிபுரிந்து வருகிறோம்! இன்றைய தினம் இந்த நாட்டை ஆண்டுக் கொண்டு வருகின்ற அமைச்சர்களோ நமது அடிப்படை இலட்சியத்தைப் பற்றி சொல்லாமல், நம்மையும், நமது அறிஞர் அண்ணா அவர்களையும் தனிப்பட்ட முறையிலே இழித்தும் பழித்தும் பேசி வருகிறார்கள்! "இவர்கள் வாழ மாட்டார்கள், இருக்கிற இடம் தெரியாமல் போய் விடுவார்கள், இந்தக் கழகம் எத்தனை நாளைக்கு இருக்கப் போகிறது, விரைவில் செத்து மடிந்து விடும்" என்று ஆருடம் கணித்து வந்தார்கள்!

நம்மை மிக மிக சாமன்யர்கள் என்று எண்ணி வந்தவர்கள், நம்மை அலட்சிய கண்ணோட்டத்தோடு பார்த்து வந்தவர்கள்—இன்று தங்கள் அலட்சிய போக்கை மாற்றிக் கொண்டு—"மக்கள் ஏன் இவர்களுக்கு இவ்வளவு பேராதரவை தருகின்றனர் இதற்கு என்ன காரணம் என்று சிந்திக்கத் தொடங்கி இருக்கிறார்கள்! நம்மைப் பற்றி எண்ணப் பார்க்கத் தொடங்கி இருக்கிறார்கள்!

எத்தனையோ முறை நமது அமைச்சர்களுக்கு நமது இலட்சியங்களை விளக்கி விளக்கம் தந்திருக்கிறோம். என்றாலும் மீண்டும் விளக்கம் தர வேண்டும்—நமது இலட்சியங்களை மீண்டும், மீண்டும் அமைச்சர்களுக்குச் சொல்லுவதால் அது வீணாகாது, தேவை என்று கூட கருதுகிறேன்!

"இவர்களுக்கு திராவிட நாட்டின் எல்லையே தெரியாது, இவர்கள் எங்கிருந்து திராவிட நாட்டைப் பெறப்போகிறார்கள்" என்று நமது அமைச்சர்கள் பேசிவருகிறார்கள்! "திராவிட நாடு என்பது எங்கிருந்து எது வரை—எந்தெந்த கிராமம், அந்த கிராமத்தின் அக்கரை எங்கிருக்கும், இந்த கிராமம் எதில் சேர்ந்திருக்கும்" என்று சர்வே வைத்து சொல்ல வேண்டும் போலிருக்கிறது! ஒரு நாடு விடுதலையடைய வேண்டும் என்று சொன்னால், ஒரு நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்று கூறினால் தன் எல்லைக் கோட்டை வகுத்துக் கொண்டு தான் கேட்க வேண்டுமா? ஒரு நாடு விடுதலை அடைந்த பின்பு—அல்லது விடுதலைக்கு சம்மதம் தெரிவித்து, அதற்கு ஒப்புதல் தந்த பிறகு "இது, இது தான் அந்த நாட்டின் எல்லை" என்று நிர்ணயம் செய்வது வழக்கம்!

வெள்ளைக்காரனிடம் சுதந்திரம் கேட்ட நேரத்தில் நீங்களெல்லோரும் எல்லைக் கோட்டை வகுத்துக் கொண்டு தான்—இதிலிருந்து இதுவரை இந்தியாவின் எல்லை என்று நிர்ணயம் செய்து கொண்டு தான் சுதந்திரம் கேட்டீர்களா?

"திராவிட அரசு" நான்கு மாநிலங்களைக் கொண்டது! எல்லைகள் பின்னால் தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்னை! இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்து 12 ஆண்டுகள் ஆகியும் இன்னும் எல்லைப் பிரச்னை தீர்ந்தபாடில்லை! பாக்கிஸ்தான் பிரதிநிதி—பாக்கிஸ்தான் பிரதிநிதி என்று கூடச் சொல்ல முடியாது—பாக்கிஸ்தானை கட்டி ஆண்டுக் கொண்டு வரும் அயூப்கான் நேற்று முன் தினம் வரை எல்லைப் பிரச்னைக்காக வந்து போகிறார்! இந்த எல்லைப் பிரச்னை இப்போது தீரும் பிரச்னையாகவும் இல்லை! இன்னும் இருபதாண்டுகள் சென்றாலும் இந்தப் பிரச்னை தீருமா தீராதா என்பது சந்தேகமே! சுயராஜ்யம் கிடைத்து 12 ஆண்டுகள் சென்ற பின்பு ஒரு புது எல்லைப் பிரச்னை வேறு கிளம்பி இருக்கிறது! சீனாவோடு எழுந்துள்ள இந்த எல்லைப் பிரச்னை தீருவதற்கு இன்னும் எத்தனை ஆண்டு காலம் பிடிக்குமோ தெரியாது! இந்த

(6-ம் பக்கம் பார்க்க)

பஸ் தொழிலை தேசியமயமாக்காத காரணமென்ன ?

காங்கிரஸ்காரர்களின் உயிர் பஸ் முதலாளிகள் கையில் இருக்கிறது!

திராவிடம் விடுதலைப் பெற்றால் தான் தென்னகம் வாழும், மக்கள் வாட்டமும் தீரும் !

சென்னை மாநாட்டில் கலைஞர் கருணாநிதி முழக்கம் !

தலைவர் அவர்களே! அறிஞர் அண்ணா அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

சீரும், சிறப்புடனும் இரண்டு தினங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த மாநாடு உங்களை யெல்லாம் தட்டி எழுப்பி புதிய உற்சாகத்தில் மூழ்க வைத்து எழுச்சி பெற வைத்திருக்கும் என்றே நம்புகிறேன்!

எனக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற தலைப்பு "பேச்சில் என்ன இருக்கிறது" என்பதாகும்! "பேச்சில் என்ன இருக்கிறது ஆகையால் எனது பேச்சை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்" என்று நமது கனம் காமராஜர் சொல்லுவார்!

நமது பேச்சில் என்ன இருக்கிறது? "பேச்சில் என்ன இருக்கிறது" என்று எண்ணிடும் காமராஜருக்கு — பேச்சால் நாட்டு மக்களை தட்டி எழுப்ப முடியும், நாட்டை விடுவிக்க முடியும் என்று எண்ணுகின்ற நாம் அவர்களுக்கெல்லாம் பதில் தருகின்ற முறையிலே நமது பேச்சு இருக்க வேண்டும்!

"திராவிட முன்னேற்றக் கழகம் வளரும் சக்தி" என்று இங்கு பேசிய முன்னணி வீரர்களெல்லாம் பேசினார்கள்!

மாநாட்டில் கூடி இருக்கிற தாய்மார்களுக்கு ஒன்று சொல்லுவேன்—"உங்கள் பேச்சில் என்ன இருக்கிறது" என்று எங்களுக்கு "எங்கள் பேச்சில் என்ன இருக்கிறது" என்பது உங்களுக்கும் தெரியவில்லை.

உங்கள் பேச்சிலே அவர், அவர் வீட்டுப் பேச்சு இருக்கும், சொந்த பேச்சு இருக்கும்! "வீட்டிற்குப் போய் என்ன செய்ய வேண்டும். வீட்டிற்கு எப்போது போவது" என்று உங்கள் பேச்சில் இருக்கும்!

மாநாட்டிலே இருக்கின்ற தாய்மார்கள் கொஞ்சம் அமைதியை கடை பிடித்து உங்கள் அருமைச் செல்வங்களை அடக்கி வைத்துக் கொண்டால் "எங்கள் பேச்சில்என்ன இருக்கிறது" என்பது உங்களுக்குப் புரியும்! நீங்க எந்த எந்த அளவுக்கு அமைதியை கடை பிடிக்கிறீர்களோ அந்த அளவுக்கு நமது அண்ணா மகிழ்ச்சி யடைவார்!

"தி. மு. க.வுக்கு பேசத் தான் தெரியும், அழகாகப் பேசுவார்கள், நன்றாகப் பேசுவார்கள்—வேறு ஒன்றும் அவர்களுக்குத் தெரியாது" என்று காங்கிரஸ்காரர்கள் மேடை தோறும் கூறி வருகிறார்கள்!

தஞ்சை தரணியிலே திருநாகைப் பட்டிணத்திலே மதிப்பிற்குரிய நமது கக்கன் சொன்னாராம்"—தி. மு, க.வில் இருப்பவர்களெல்லாம் இளம் வெட்டுகள் என்று! அதையும் படித்து விட்டு உங்களையும் பார்க்கிறேன் உங்களில் பலரும்—ஆடவர்களிலும் சரி, பெண்களிலும் சரி நரைத்தத் தலையைத் தான் காண்கிறேன். முதுமைப் பருவத்தினரைத் தான் பார்க்கிறேன்! திரு நாகப்பட்டிணத்திலோ கக்கன் நம்மை யெல்லாம் இளைஞர்கள் என்று கூறி இருக்கிறார்! அவர் சொன்னது நமது உருவத்தையும், பருவத்தையும் குறிப்பிட்டல்ல—நமது கொள்கைகளையும், இலட்சியங்களையும் குறிப்பிடுத் தான் சொல்லி இருக்கக் கூடும்!

நான் அந்த கக்கனுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்! தி. மு. க,வில் இருப்பவர்கள் இளைஞர்கள் தான் ! தி. மு க.வில் இருக்கும் தலைவர்களுக்கெல்லாம், பேச்சாளர்களுக்கெல்லாம உலக அரசியல் தெரியும்! தி. மு. க.வில் இருப்பவர்கள் ரூசோவைப் படித்தவர்கள்—தி.மு,க.வில் இருப்பவர்கள் வால்டேரைப் பற்றித் தெரிந்தவர்கள். லெனினைப் பற்றித் தெரிந்தவர்கள், ஸ்டாலினைப் பற்றி புரிந்தவர்கள், சர்ச்சிலின் அரசியலைப் பற்றித் தெரிந்தவர்கள்! உலகில் எப்படிஎப்படி போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன, அடிமை நாடுகள் அனைத்தும் விடுபட்டதெல்லாம் எங்கனம்என்பதைப்பற்றி யெல்லாம் தெரிந்து கொண்டிருப்பவர்கள்! தி மு. க.வில் இருக்கும் ஆயிரமாயிரம் இளைஞர்கள் அரசியல் அனுபவம் பெற்ற இளைஞர்கள்! சரித்திரம் படித்தவர்கள். பூகோளம் தெரிந்தவர்கள்! இங்குள்ளோர் அனைவரும் இளம் கன்னிகள் தான்! ஆனால் அவர்கள் கிழப்பிஞ்சுகள் தான் !

ஆனால், நாட்டை மீட்கும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தி. மு க, வுக்குப் பேசத் தான் தெரியும் என்று கக்கன் சொல்லுகிறார் காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும் சொல்லுகிறார்கள்!

தி. மு. க வுக்குப் பேசத்தான் தெரியுமென்று சொல்லி திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கை அழித்துவிடலாம், இந்த மகத்தான சக்தியை ஒழித்துவிடலாம், என்று கக்கன் நினைக்கிறார்! அப்படி அவர் நினைத்தால் இந்த மாநாட்டை வந்து காணட்டும், ஆர்வத்தின் மொத்த உருவாய் விளங்கிடும் இந்த மாபெரும் சக்தியை வந்து பார்க்கட்டும் !

"பேச்சில் என்ன இருக்கிறது' என்று கேட்பவர்களுக்குச்சொல்லுகிறேன் — எங்கள் பேச்சில் இலட்சியம் இருக்கிறது, கொள்கை இருக்கிறது, ஏழை மக்களின் வாட்டத்தைப் போக்கவழிவகை இருக்கிறது" என்பதை இந்த மாநாட்டிலே பேசப்படுகின்ற பேச்சுகளை வந்து கேட்டு தெரிந்து கொள்ளட்டும்! "அவர்கள் பேசுவதிலே தத்துவம் இருக்கிறதா? கருத்து இருக்கிறதா?" என்பதை இங்கே வந்து காணட்டும்!

பேச்சில் என்ன இருக்கிறது" என்று கேட்பவர்களுக்கு—தி.மு. க. பேச்சில் என்ன இருக்கிறது என்பதை இங்கே பேசப்படுகின்ற பேச்சுகளைக் கேட்டு நம் பேச்சில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளட்டும்!

"பேச்சில் என்ன இருக்கிறது" என்று கேட்பவர்களுக்கு சொல்லுவேன்" பேச்சில தான் எல்லாம் இருக்கிறது" என்று!

சட்ட சபையில் பேசினாலும், மேடையில் பேசினாலும், வேறு எங்கு பேசினாலும் - நாங்கள் கவனம் செலுத்துவது வார்த்தையில் சொல்லில் அழகு மொழியில், ஜாலத்தில் அலங்காரத்தில் அல்ல, அல்ல! மக்கள் வாழ்வில், நாட்டின் வளத்தில். நாட்டின் விடுதலையில் தான் கவனத்தை எடுத்து வைக்கிறோம்! இதை கக்கன்ஜீ உணர வேண்டும்!

பேசுவது கேவலம், பேசுவது தரக்குறைவு, என்று காங்கிரஸ்காரர்கள் கருதுகிறார்கள்! காரணம் பேசத்தெரியாது! பேசினாலும் பேச்சு வராது! அதனால் தான் காங்கிரஸ்காரர்கள் பேச்சை இழிவாகக் கருதுகிறார்கள்!

பேச்சை இழிவாக கருதுபவர்கள், "பேச்சில் என்ன இருக்கிறது" என்று கேட்பவர்கள் உலகத்தில் எங்குமே கிடையாது காங்கிரஸ்காரர்களைத் தவிர! உலகத்தில் உள்ள பெரும் பெரும்மேதைகள் எல்லாம் பேச்சை இழிவாகக் கருதுவது கிடையாது! "பேச்சால் நல்ல பல சாதனைகளை சாதித்து காட்ட முடியும்" என்று எண்ணி வருகிறார்கள் !

சர்ச்சில் தன்பேச்சை இரண்டு வாரம் வரை தயார் செய்து பேசி இருக்கிறார் ! இரண்டு வாரம் வரை தயார் செய்த பேச்சை பேசுவதற்கு முன்பு பத்திரிகை நிருபர்களிடம் கொடுப்பது வழக்கமாம்! பத்திரிகை நிருபர்களிடம் கொடுப்பதற்கு முன்பு—இந்த இடத்தில் கரகோஷம், இந்த இடத்தில் ஆரவாரம், இந்த இடத்தில் சிரிப்பு. இந்த இடத்தில் கை தட்

15-ம் பக்கம் பார்க்க

பத்தாண்டு காலத்தில் நாம் பெற்றிருக்கிற வளர்ச்சி - இந்த நாட்டில் வேறு எவருமே பெறவில்லை !

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

இருபதாண்டு காலத்திற்கு முன் தகப்பன் செய்த காரியத்தை மகன்—தகப்பன் செய்ததை விட சீறும் சிறப்புமாக செய்வானுகில் தகப்பன் தன் பிள்ளையின் திறமையை கொண்டாடுவது போல, இன்றைய தினம் கழகம் இவ்வளவு வளர்ந்திருப்பதை எண்ணி மாநில மாநாடு கூட்டியவர்களெல்லாம் மாவட்ட மாநாடு கூட்டியவர்களைப் பார்த்ததும் பெருமைப்படுவார்கள்! அவர்களை யெல்லாம் உற்சாக வெள்த்தில் ஆழ்த்துகிற அளவுக்கு இத்தகைய பெருமையை தேடிக்கொடுத்த நண்பர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன், நமது கழகம் இந்த அளவுக்கு வளர்ந்திருப்பது கண்டு நான் மெத்த மகிழ்ச்சி யடைகிறேன்.

இந்த வெட்ட வெளியில் இவ்வளவு பெரிய கொட்டகையைப் போட நமது தோழர்கள் இரவு பகலாக உழைத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்,

அடுத்தபடியாக தொண்டர் படையினர் இந்த இரண்டு தினங்களிலும் நல்ல முறையில் சமாளித்துப் பணியாற்றி இருக்கிறார்கள். அடுத்தபடியாக இந்த மாநாட்டில் சொற்பொழி வாற்றிய நமது கழக முன்னணி வீரர்கள் நல்ல கருத்துகளை விளக்கினார்கள். இவர்களனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது கழகம் இந்த அளவுக்கு வளர இரத்தத்தை சிந்தியவர்கள் எத்தனை பேர். கையை இழந்தவர் பல பேர். கால்களை இழந்தவர்கள் அநேகர் இன்னும் சிலர் உயிரையே இழந்திருக்கிறார்கள், அப்படி யெல்லாம் கரமிழந்து, காலிழந்து இரத்தம் சிந்தியோருக்கெல்லாம் இந்த நேரத்தில் நமது வீர வணக்கத்தை செலுத்த வேண்டியது நமது கடமையாகும். அவர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் நான்என துவீரவணக்கத்தையும் செலுத்திக் கொள்கிறேன்.

அவர்கள் சிந்திய இரத்தம் வீணாகவில்லை. அவர்கள் கொட்டிய வியர்வை விழலுக்குப் பாயவில்லை.

"அவர்கள் நம் கழகத்துக்காக உழைத்த நேரத்தில்"—"நீங்கள் நல்லவிதையை உங்கள் கையிலே வைத்திருக்கிறீர்கள் ! ஆனால் அவைகளைப் பாலைவனத்திலே தூவுகின்றீர்கள் அப்படிப் பாலை வனத்தில் தூவுகின்ற காரணத்தாலே விதைகள் நல்ல விதைகளாக இருந்தாலும் அவைகள் முளைக்கப் போவதில்லை; பயிர் விளையாது" என்று கூறி அவசர ஆருடம் கணித்தவர்கள் உண்டு. ஆனால் அவர்கள் கூறியது போல நம்மிடமிருந்த விதைகளை பாலைவனத்தில் தூவவில்லை! நம் கையிலிருந்த விதைகளும் நல்ல விதைகள் தான்! அந்த விதைகள் தூவப்பட்ட இடமும் நல்ல இடம் தான்! அப்படி நாம் தூவிய காரணத்தினால் தான் அந்த விதைகள் இன்று முளைத்து செடியாகி, மரமாகி பூத்துக் காய்த்துக் கனி தரும் அளவுக்கு திகழ்கின்றன! இப்படி திகழ்வதைக் கண்டு—நம்முடைய உற்சாகத்தை எடுத்துக் காட்டுகின்ற அளவுக்கு அந்த வீரத்தியாகத் தோழர்களுக்கெல்லாம் நம் வீர வணக்கத்தை செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அப்படி வீர வணக்கம் செலுத்தும் போது நாம் அவர்களைப் பார்த்து என்ன சொல்ல வேண்டும்? "கண்ணிழந்த தோழனே—நீ கண் இழந்தாய்—கழகம் வளர உன்னுடைய தியாகம் உதவியிருக்கிறது ! கரமிழந்த தோழனே நீ செய்த தியாகம் வீண் போகவில்லை! உன்னுடைய தியாகம் கழகம் வளர உதவியிருக்கிறது! காலிழந்த கர்ம வீரனே நீ செய்த தியாகம் கழகம் வளர உதவியிருக்கிறது! நீ செய்த தியாகம் வீண் போகவில்லை! இந்த கழகத்தை நாங்கள் கட்டிக்காத்து வருகிறோம்" என்று சொல்லி நம் வீர வணக்கத்தை செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்,

இதைத் தவிர அவர்களுக்கு நாம் வேறு எதையும் செய்ய முடியாது, காங்கிரஸ் கட்சி தியாகிகளுக்கு ஐந்து ஐந்து ஏகர் நிலத்தை சொந்த மாக்குவது போல் நம்மால் செய்ய முடியாது கை, கால், கண் இழந்த தோழர்களும் உயிரிழந்த உத்தமர்களும், கழகம் வளர வேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்டார்கள். எதன் காரணமாக இந்த நாட்டை தியாக பூமியாக்கிய அந்த உத்தமர்கள் இருந்த திக்கு நோக்கி வீர வணக்கம் செலுத்திக் கொள்வோம்!

அப்படி நீங்கள் வீர வணக்கம் செலுத்துகின்ற நேரத்தில் ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த வீரர்கள் அடக்கு முறைக்கு அஞ்சியதில்லை தடியடிப் பிரயோகத்தைக் கண்டு தப்பி ஓடியதில்லை! துப்பாக்கியைக் கண்டு துவண்டதில்லை! அப்படி அவர்கள் இந்த வீர தியாகத்தைப் புரியாமலிருந்தால் இன்று நீங்களும் நானும் இந்த அலங்காரக் கொட்டகையில் உட்கார்ந்து மாநாடு நடத்தும் சிறப்பைப் பெற்றிருக்க முடியாது!

நம் வளர்ச்சிக்கு அந்த உத்தமர்கள் உழைத்த உழைப்பு காட்டிய ஆர்வம் சிந்திய இரத்த வியர்வை வீண் போகவில்லை! கழகத்திற்காக உழைத்தவர் இன்னும் எத்தனையோ பேர் ஊர், பேர் தெரியாத நிலையிலிருக்கின்றனர்! கழகம் வளரப் பாடுபட்டவர்கள் -தியாகம் புரிந்தவர்கள் தியாக உள்ளம்படைத்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்! அவர்கள் என்ன நினைத்தார்கள்! நமது கழகம் வளர வேண்டும்! சட்ட சபையை கைப்பற்ற வேண்டும்! நகர சபையைக் கைப்பற்ற வேண்டும்! கழகத்தின் குரல் பட்டி தொட்டிகளிலெல்லாம் ஒலிக்க வேண்டும்! இப்படி யெல்லாம் திட்டமிட்டு உள்ளத்தில் வைத்துக் கொண்டு அவர்கள் பாடுபட்டதினாலே தான், நம் இயக்கம் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது ! அவர்களுடைய தியாகத்தையும், வீரத்தையும் எண்ணிப் பார்த்து அவர்களுடைய தியாகத்தில் பத்தில்—நூற்றில், ஆயிரத்தில் ஒரு பகுதியாவது நாம் செய்ய வேண்டும்!

நமது தோழர்களுக்கு நாம் வீர வணக்கம் செலுத்தும்போது நாம் என்ன சொல்ல வேண்டும். "கண்ணை இழந்த தோழனே! நீ கண்களை இழந்தாய் எங்களுக்கு கண்கள் இருக்கிறது. இந்தக் கண்கள் எதற்குப் பயன் படுகிறது. இந்தக் கண்களால் நாட்டைப் பார்க்கிறோம். காண வேண்டாத காட்சிகளைக் காண்கிறோம். நாங்கள் காணும் கோரக் காட்சிகள் சொல்லி முடியாது, நாட்டிலேயுள்ள பஞ்சைப் பராரிகளைப் பார்க்கிறோம். கறை படிந்த வரலாற்றைப்

(14-ம் பக்கம் பார்க்க)

பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம். மாநாட்டுத் திறப்பாளர் அரங்கண்ணல், தலைவர் டி. கே. சீனுவாசன், செழியன்!

சிதம்பரம் வட்டாரத்தில் காங்கிரஸ்காரர்கள் செய்த காலித்தனங்கள் கொஞ்சமல்ல !

அவர்கள் கொட்டத்தை அடக்க தி. மு. க.வை பலப்படுத்துங்கள் !

இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் முழக்கம் !

தலைவர் அவர்களே! அறிஞர் அண்ணா அவர்களே! இந்த மாநாட்டில் வெள்ளம்போல் குழுமி இருக்கும் தாய்மார்களே! தோழர்களே!

எனக்கு முன்பு பேசிய நண்பர் டி. வி. நாராயணசாமி கலையுலக வளர்ச்சியைப்பற்றி குறிப்பிட்டுப் பேசியபோது பத்தாண்டு காலத்தில் நாம் வளர்ந்திருக்கிற வளர்ச்சியைப் பற்றியும் எடுத்துக் கூறினார்கள்!

'திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைக் குறைக்க வேண்டும், அறிஞர் அண்ணா அவர்களின் செல்வாக்கை குறைக்க வேண்டும்'' என்று பல மேதாவிகள், தங்களைத் தானே மேதாவிகளாக எண்ணிக்கொண்டிருப்பவர்கள் நினைக்கிறார்கள்! அண்ணாவின் செல்வாக்கைக் குறைக்கவோ, திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்கவோ எவராலும் முடியாது என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்!

அறிஞர் அண்ணா விடுதலைப் பட்டாளத்தின் தளபதியாக இருந்தபோதிலும், ஒரு நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டுவரும் தலைவராக இருந்த போதிலும், அறிஞர் அண்ணாவுக்கு ஈடுஇணையாக உள்ள அறிஞர் எவருமே இல்லை! அண்ணாவுக்கு ஈடு அண்ணாவேதான்!

பக்தவத்சலம் அண்ணாவின் திறமையை, அண்ணாவுக்கு இருக்கிற செல்வாக்கை, அண்ணாவுக்கு இருக்கிற ஆற்றலைப் பாராட்டுகிறார்!

ராஜாஜி, ''அண்ணா வாழ்க!'' என்று கூறுகிறார்!

இன்னும் மற்ற மற்ற மாற்றுக் கட்சித் தோழர்களும நமது அண்ணாவைப் பாராட்டுகிறார்கள்!

தி. மு. க. மீது சாட்டப்படுகின்ற குற்றங்களெல்லாம் சினிமாக்காரர்கள் என்பதுதான்! கூத்தாடிகள் என்பதுதான்! நாடகமாடிகள் என்பதுதான்!

நான் கேட்கிறேன், சினிமாத் தொழில் அப்படியென்ன பஞ்சமா பாதகத் தொழிலா? சினிமாத் தொழில் அப்படியென்ன இழிவானதா? கேவலமானதா?

மாட்டுப் பெட்டிக்காரர்கள் தங்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு மட்டும் சினிமாவைப் பயன்படுத்திக் கொள்ளலாமா? நமது அருமை காங்கிரஸ் நண்பர்கள் இதற்கு விளக்கமான பதில் தர வேண்டும்!

சிதம்பரம் இடைத் தேர்தலில் பெரும் பெரும் பணக்காரர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சிக்கு உதவி செய்து வருகின்றார்கள்!

அந்த தேர்தலில் போலீஸ் அதிகாரிகள் காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு கேட்பது குற்றமல்லவா? சப் இன்ஸ்பெக்டர், பெரிய பெரிய போலீஸ் அதிகாரிகள் ஓட்டுக் கேட்டால் குற்றமென்று தானே சொல்லுவார்கள்! அதே போலீசுக்கெல்லாம் பெரிய அதிகாரியாக இருக்கிற போலீஸ் மந்திரி பக்தவத்சலம் மட்டும் காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு கேட்கலாமா? இதுமட்டும் நியாயம் என்று சட்டம் சொல்லுகிறதா?

நான் சிதம்பரத்தில் பல்வேறு ஊர்களில், பல்வேறு கூட்டங்களில் பேசிவிட்டு வந்திருக்கிறேன்! அங்கே அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள், ஆளும் அமைச்சர் ஊர் ஊராகச்சென்று ஓட்டு கேட்கிறார்கள்! அப்படி அமைச்சர்கள் சென்று ஓட்டு கேட்டால் மக்கள் பயப்படத் தானே செய்வார்கள்! அதனால் எதிர் கட்சிகளுக்கு ஓட்டு போட வேண்டும் என்று எண்ணுகிறவர்கள்கூட — அமைச்சர்களுக்குப் பயந்துகொண்டு காங்கிரஸ் கட்சிக்குதானே போடுவார்கள்! இதுமட்டும் நியாயமா? அதிகாரத்தில் இருந்து ஓட்டு சேகரிப்பது எந்த விதத்தில் நேர்மையானது என்று காங்கிரஸ் மந்திரிகளைக் கேட்கிறேன்!

சிதம்பரம் வட்டாரத்தில் காங்கிரஸ்காரர்கள் செய்த காலித்தனங்கள் கொஞ்சமா? எல்லாவற்றிக்கு நம் தோழர்கள் சகித்துக்கொண்டே போனார்கள்! அப்படி நம் தோழர்கள் சகித்துக்கொண்டு போகாவிட்டால் நிலைமை என்னவாகி இருக்கும் என்பதை கொஞ்சம் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்!

தென்னாடு தனியாகப் பிரிந்தால்தான் திராவிட நாட்டு மக்களுக்கு வாழ்வு கிடைக்கும், வளம் கிடைக்கும்!

தென்னாட்டு மக்கள் அனைவரும் ஒன்றே குலமாய் வாழ வேண்டும்! ஒருவனே தேவன் என்ற கொள்கையை கடைபிடிக்க வேண்டும்! அப்போதுதான் தென்னாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும்!

தி. மு. க. நமது இயக்கம், தி. மு. க. மக்கள் அன்போமே பாசத்தோடும் நேசிக்கிறார்கள்! இது எதிர் கட்சிகளின் கண்ணை உறுத்துகிறது! எனவே ''தி. மு. க.வை பலப்படுத்துங்கள், தி.மு.க.வை பலப்படுத்துங்கள்'' என்று கூறி முடிக்கிறேன்!

11-ம் பக்கத் தொடர்ச்சி

இதைவிட வேறு என்ன திட்டங்கள் இருக்கின்றன!

காங்கிரஸ்காரர்கள் — ஆந்திரர்கள் அறியவில்லையே, கேரளர்கள் கேட்கவில்லையே, கன்னடத்தார்கள் காது கொடுக்கவில்லையே என்று கேலி பேசி வருகிறார்கள்! உங்களுடைய கேலியால், கிண்டலால் எங்களை மட்டும் அழித்து விடலாம் என்று கனவு காண வேண்டாம்! நாங்கள் எதற்கும் அஞ்சாதவர், எங்கள் கொள்கைகளை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது!

மொழிவழியில் பிரிந்து, இனவழியில் ஒன்றுபடுவதே திராவிட கூட்டாட்சி! அவர்களோடு நாங்கள் ஒன்றுபட முடியும், நிச்சயமாக ஒன்று படுவோம்! அதைப்பற்றி எந்த காங்கிரஸ் காரர்களுக்கும் சந்தேகம் வேண்டாம், கவலையும் வேண்டாம்!

''எல்லை எது, உங்களுடைய எல்லை எது'' என்று கேட்கிறார்கள்! மொழியால். நாகரீகத்தால், பண்பாடு இவைகளால் நாங்கள் எல்லையை வகுத்திருக்கிறோம்!

இந்தியா என்ற எல்லைக்கோடு எப்போது வந்தது? வெள்ளைக்காரன் அடிதடியால், துப்பாக்கியால் கிழித்துவிட்ட கோடு தானே இந்தியாவின் எல்லைக் கோடு!

உலகத்தில் வேறு எந்த நாட்டிற்கும் இல்லாத திட்டவட்டமான எல்லைக்கோடு அமைந்த நாடு திராவிட நாடு ஒன்றுதான்! திராவிட நாட்டிற்கு அமைந்திருக்கும் எல்லைக் கோட்டைப் போல் வேறு எந்த நாடுகளுக்குமே எல்லைக் கோடுகள் அமையவில்லை! எல்லா நாடுகளிலும் சண்டைகளையும், சச்சரவுகளையும் தரும் எல்லை கோடுகள்தான் இருக்கின்றன! இங்கே அப்படிப்பட்ட எல்லைக்கோடு கிடையாது! இதைப் பற்றியும் காங்கிரஸ் நண்பர்கள் துளியும் கவலைப்பட வேண்டாம்!

வடக்கேயுள்ள பந்த், மொரார்ஜி தேசாய் இவர்களோடு அதிக நன்மைகளை எதிர்பார்க்கின்ற உறவைக் காட்டிலும்—ஆந்திரத்தில் உள்ள சஞ்சீவி ரெட்டியேடும், மற்ற மாநிலங்களில் உள்ள நிஜலிங்கப்பா, நம்பூதிரிபாட்டோடும் தொடர்பு கொள்வது அதிக நன்மைகளைத் தரும்!

எனவே, திராவிடத்தின் விடுதலை மிக மிக அவசியமானது என்பதை மக்கள் உணர்ந்து அதற்கேற்ப பணிகளை செய்து, திராவிடத்தை மீட்க இளைஞர் பட்டாளம் புறப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்!

உணவுப் பஞ்சம் தீர தென்னகம் விடுதலை பெற வேண்டும் !

அமெரிக்க கோதுமைக்கு இறக்குமதி உண்டு ! இரங்கூன் அரிசிக்கு மட்டும் தடையா ?

என். வி. நடராசன் முழக்கம் !

தலைவர் அவர்களே! அண்ணா அவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

"உணவுப் பிரச்சனை" என்ற தலைப்பில் என்னை பேசுமாறு கட்டளையிட்டிருக்கிறார்கள்!

தமிழ் நாட்டில் இப்போது எழுந்துள்ள உணவுப் பிரச்சனையைப் பற்றி நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள்! நாளுக்கு நாள் உணவுப் பொருள்களின் விலை விஷம்போல் ஏறிக்கொண்டே போகின்றன! இதைக் கட்டுப்படுதத இந்த சர்க்காருக்கு வழியில்லை, வக்கு இல்லை! எல்லா அதிகாரங்களையும்வடநாட்டுகாரனிடம் ஒப்படைத்து விட்டு திருதிருவென்று விழிக்கிறார்கள்! நம்முடைய உணவுப பிரச்சனையைப் பற்றி வடநாட்டுக்காரர்களுக்கு என்ன அக்கரை இருக்க முடியும்! டில்லியில் அதிகார பீடத்தில் அமர்ந்து கொண்டிருக்கும் வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்கள் தமிழ் நாட்டு மக்களைப் பட்டினிப்போட்டு சாகடிக்கிறார்கள்!

தமிழகத்தை தனி உணவு மண்டலமாக அமைக்க வேண்டுமென்று நமது மதிப்பிற்குரிய கனம் பக்தவத்சலம் டில்லி ஆதிக்கக்காரர்களிடம் காவடித் தூக்கிச் சென்றார்! ஆனால் டெல்லியில் இருக்கும் வடநாட்டு சர்க்கார் பகதவத்சலத்தின் நெற்றியில் பட்டையாக நாமத்தை குழைத்துப் போட்டு அனுப்பி விட்டார்கள்! இங்து வீருப்புடன் பேசி விட்டு சென்ற அமைச்சர் அங்கு அதட்டி கேட்க தைரியமில்லாமல்திரும்பி வந்து விட்டார்! இது ஒனறே போதும் வடக்கு. தெற்கு என்று சொல்ல!

இங்குள்ள மந்திரிகள் மக்களைப் பார்த்து அதிகமாக தினி சாப்பிடாதீர்கள் என்று கூறி வருகிறார்கள்! "அப்படி அதிகமாக தினி சாப்பிட்டால் மாரடைப்பால் இறந்து விடுவீர்கள்" என்று மாணிக்க வேலர் கூறி வருகிறாராம்! இவர்கள் வெறும் கோமாளிகளைப் போல் பேசி வருகிறார்களே தவிர நாட்டு மக்களுக்கு ஒரு உருப்படியான காரியங்களையும் செய்வது கிடையாது!

வெள்ளைக்காரன் காலத்தில் இரங்கூனிலிருந்து ஏராளமான அரிசி இறக்குமதி செய்யப்பட்டது! இன்று அதை அடியோடு நிறுத்தி விட்டார்கள்! ஆனால் வடநாட்டுக்காரர்கள் சாப்பிடும் கோதுமையை மட்டும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள்! இந்த ஓர வஞ்சனை ஏன்? உணவுப் பிரச்சனையில் கூட வடக்கு, தெற்கு ஏன் என்று தான் கேட்கிறேன் !

வடநாட்டுக்காரர்கள் மட்டும் வயிறு புடைக்க சாப்பிடலாம் தென்னாட்டு மக்கள் மட்டும் பட்டினியால் சாக வேண்டும் என்றால் இது என்ன நியாயம்! இதை எல்லாம் கேட்க நமது மதியூக மந்திரிகளுக்கு தைரியம் வரவில்லை! நாம் வடக்கு, தெற்கு என்று சொன்னால் மட்டும் இவர்களுக்கு ரோஷம் வந்துவிடுகிறது! இது போன்ற கங்காணி வேலையால் அவர் பதவி நிலைக்கக் கூடுமே தவிர மக்களுக்கு பயனில்லை!

இந்த மாநாட்டிற்கு வரும் மக்களுக்கு தேனீர் குடிக்க சர்க்கரை வேண்டுமென்று கேட்டோம்? சர்க்கரை நமக்குக் கொடுக்க சர்க்கார் மறுத்து விட்டது! இந்த மாநாடே ஒரு காங்கிரஸ் மாநாடக இருந்தால் மூட்டை மூட்டையாக சர்க்கரை வந்து இறங்கி இருக்கும்! இப்படி யெல்லா விதங்களிலும் நமக்கு தொந்தரவுகளைக் கொடுக்கிறார்கள்!

தென்னாட்டில் உணவுப் பஞ்சத்தால் மக்கள் அவதிப்படுகிறார்கள்! அல்லல்படுகிறார்கள்! இதை காருண்ய மிகுந்த காங்கிரஸ் மந்திரிகள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்! இதற்குப் பரிகாரம் தேட சர்க்கார் இதுவரை முன்வரவில்லை!

உணவுப் பொருள் வேண்டுமென்றால் புண்ணாக்கை, தின்னுங்கள், பருத்திக் கொட்டையைத் தின்னுங்கள் என்று சொல்லத் தான் இநத நாட்டில் ஆட்கள் இருக்கிறார்கள்!

ஆகையால் இந்த அநீதிகளையெல்லாம் ஒழித்துக் கட்ட நாம் எல்லோரும் ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கூறி எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்!

சென்னை மாநாட்டில் சி. பி, சிற்றரசு முழக்கம் செய்கிறார் !



கெங்கையோ, காவிரியோ, கரையை உடைத்திடும், காட்டாற்று வெள்ளமோ அல்ல! அலைமோதும் மக்கள் கடல் பொங்கி எழும் காட்சி! ஆட்சி மலையைக் கெல்லும் பாட்சி!

3-ம் பக்கத் தொடர்ச்சி

செய்யாதவர்கள் எல்லாம் பொருளுதவி செய்ய முன் வந்துள்ளனர் தெளிவு பெறாதவர்கள் எல்லாம் தெளிவு பெற்றுள்ளார்கள். விரும்பாதவர்கள் எல்லாம் விரும்ப ஆரம்பித்து விட்டார்கள், ஏளனமாகப் பேசியவர்கள் இன்று போற்றிப் பேச ஆரம்பித்துள்ளனர். நம்மை விரட்டியவர்கள் எல்லாம் இன்று வாருங்கள் என்று அழைக்க ஆரம்பித்து விட்டார்கள். நம்மீது கல்லெடுத்து வீசிய கரங்கள் எல்லாம் இன்று மாலைபோட்டு நம்மை வரவேற்கின்றன. இதற்குக் காரணம் நமது கொள்கைகள் நியாயமானவை. இந்த மண்ணுக்கு தேவையானவை இந்த நாட்டு மக்களை மக்களாக வாழவைக்க விரும்புபவை இந்த நாட்டிலே உள்ள இயற்கை வளங்கள் இந்த நாட்டுக்கு பயன்பட வழி செய்ய வேண்டும் என்று கூறுபவை. இந்த நாட்டிலிருந்து போகும் வரிப்பணம் இங்கேயே இருக்க வேண்டும். அந்தப் பணம் இந்த நாட்டுக்கே பயன்பட வேண்டும் என்று நினைப்பவை, இந்த நாட்டு மக்கள் உண்ண உணவின்றி சட்டியேந்தி பிச்சையெடுக்கும் நிலை ஒழிய வேண்டும் என்று நினைப்பவை. நம்மைவிட நம் கொள்கைகள் வலிவு பெற்றவை.

நமது மாற்றார் அதிகார வலிவு பெற்றிருக்கின்றனர் ஆதிக்க வலிவு பெற்றிருக்கின்றனர். அவர்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாம் சாமான்யர்கள் தான்.

அமைச்சர் முதல் ஆண்டிப் பண்டாரம் வரை நம்மைத் தாக்கி வருகின்றனர்! காமராஜர் இருக்கட்டும்! சுக்கன்ஜி இருக்கட்டும்! ராஜாராம் இருக்கட்டும்! அகில உலகம் புகழும் நேருவே திருச்சியிலே திண்டுக்கல்லிலே, மதுரையிலே, அப்பொழுதிலே நம்மைப் பற்றித் தாக்கிப் பேசினர்! நமது கொள்கைகள் சிறுபிள்ளைத் தனமானவை வடிகட்டிய முட்டாள் தனம், நாம் உடை உடுக்கத் தெரியாத காட்டு மிராண்டி வர்க்கத்தினரை சேர்ந்தவர்கள் என்றெல்லாம் பேசினர். அவர் அப்படிச் சொன்னதால் நமது கழகம் விழ்ந்து விடவில்லை!

நேரு சொன்னதை மக்கள் ஆம்! ஆம்! என்று ஆமோதித்தா விட்டனர். நேரு சொல்வதற்கு முன் நகராட்சி மன்றத்திலே இருவரே இருந்தோம்! அவர் சொல்லி விட்டுப்போன பின் நகராட்சி மன்றத்திலே நாற்பத்தியைந்து பேர் நமது முத்திரையுடன் உள்ளனர்!

நீங்கள் கேட்கலாம்—நேருவை விட நீங்கள் செல்வாக்கு படைத்தவர்களா என்று! இல்லை நேருவுக்கு உள்ள செல்வாக்கு நமக்கு இல்லை தான். ஆனால் நேருவின் சொல்லுக்கு இருக்கும் மதிப்பை விட அண்ணாவின் சொல்லுக்கு மதிப்பு உண்டு!

நம்மையெல்லாம் ஆளாக்கிய பெரியார் ராமசாமி நம்மையெல்லாம் துரோகிகள், பதவி வெறி பிடித்தவர்கள் என்று கூறிவிட்டார். ராமசாமி பெரியாரே சொல்லி விட்டாரே என்று ஆம்! ஆம்! என்று மக்கள் இருந்து விட்டனர்!

நாம் மக்களுக்கு தேவையான கருத்துகளை எடுத்து வைக்கிறோம்!

நாம் வளர்ந்து வருகிறோம்! ஆனால் பூரண வளர்ச்சியடைந்து விடவில்லை! வளர வேண்டிய அளவு இன்னமும் இருக்கிறது. மாற்றார் வீழ்ந்து கொண்டே வருகின்றனர்! பூரணமாக வீழ்ந்து விடவில்லை! விழ வேண்டிய அளவு விழுந்து விடவில்லை.

அவர்களுடைய கொள்கை 1947 ஆம் ஆண்டோடு போய் விட்டது! உணர்ச்சியோடு உள்ளத் துடிப்போடு மக்களிடம் வைக்க வேண்டுமென்கிற கொள்கை இன்று இருக்கிறதா என்றால் இல்லை! அன்று வெள்ளையன் வெளிநாட்டான்! அவன் இந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டும்! இந்தியா சுதந்திரம் பெற வேண்டும் என்று நினைத்தனர்! துப்பாக்கிமுனைக்கு அஞ்சாமல், பீரங்கிக்கு மார்பை காட்டி, செக்கிழுக்கச் சொன்னாலும் செக்கிழுத்து மாண்டு மடிய தயார் என்று துடிதுடிப்போடு எடுத்து வைத்த ஒரு நோக்கம் தான் மக்களின் ஆதரவைத் தேடித் தந்தது! அந்த கருத்து தான் நாட்டு மக்களின் ஆதரவைத் தேடித் தந்தது! அந்தகருத்து சாயல் படித்திருந்த காரணத்தால் காந்தி பயன்பட்டார்! அந்த சாயல் படிந்திருக்கின்ற காரணத்தால் நேரு பயன்படுகிறார்! 1947ல் நாடு விடுதலை அடைந்தது. அத்துடன் அவர்கள் நோக்கம் நிறைவேறி விட்டது! அதற்குப் பிறகு மக்களிடம் எடுத்து வைப்பதற்கு வேறு எந்த திட்டமோ கொள்கையோ இல்லை

நம்மிடமோ ஏராளமான கொள்கைகளும், திட்டங்களும் இருக்கின்றன! இந்த நாடு விடுதலை பெற வேண்டும் என்று கூறுகிறோம்! கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தமிழ் நாடு ஆகிய நான்கு மாநிலங்களும் மொழி வழி பிரிந்து இனவழி ஒன்றுபட வேண்டும் என்று கூறுகிறோம். இந்த நாட்டு வரிப்பணம் டெல்லிக்குப் போகாமல் இங்கேயே தடுக்கப்பட்டு இங்குள்ளவர்கள் பயனடையும்படி செய்ய வேண்டுமென்று கூறுகிறோம்! இப்படிப்பட்ட கொள்கைகளை நாம் எடுத்து வைப்பதால் தான் இளைஞர்கள் உணர்ச்சியோடு நமது கழகத்தில் வந்து சேருகிறார்கள்! அவர்கள் எடுத்து வைக்க கூடிய திட்டங்கள் என்ன? கூட்டுறவு பண்ணையை கொண்டு வரலாம்! கைராட்டையும், காதி திட்டங்களையும் பற்றி உபதேசிக்கலாம்.

8-ம் பக்கம் பார்க்க

சென்னை மாவட்டம் சாதித்த சாதனைகள் பலவுண்டு!

மாநகராட்சியைக் கைப்பற்றினோம்! காங்கிரஸ்காரர்களை வீழ்த்தினோம்!

எங்களோடு ஒத்துழைத்த அனைவருக்கும் எங்கள் நன்றி!

மாவட்டச் செயலாளர் செங்குட்டுவன் வரவேற்புரை!

வெள்ளம் போல் திரண்டிருக்கும் திராவிடப் பெருங்குடி மக்களே! அறிஞர் அண்ணா அவர்களே! பொதுச்செயலாளர் அவர்களே! நாட்டுக்கு நல்வழி காட்டி எங்களுக்கு வேலைத் திட்டம் வகுத்துக் கொடுக்க வருகை தந்துள்ள கழகத் தலைவர்களே உங்களனைவரையும் நல்வரவு கூறி வரவேற்பதிலே நான் பெருமையடைகின்றேன்.



எங்கள் சென்னை மாவட்டம், மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் அளவிலும், உருவிலும் சிறிதே ஆனாலும் எம் பணிகளுக்குத் தோள் கொடுத்துத் துணை புரியும் பெருமக்கள் பல இலட்ச கணக்கில் இருக்கின்றனர் என்பதை இங்கு குழுமியுள்ள மக்கள் கடலைப்பார்த்து பேருவகையும் பெரியதோர் பொறுப்புணர்ச்சியும் கொள்கிறோம்,

ஓர் நாட்டின் தலைநகராக விளங்கும் பெரு நகருக்கிருக்கும் சிறப்புகளைச் சொல்லிக் கொண்டிருக்கத் தேவை இல்லை. என்றாலும் அந்தத் தலைநகரை மாவட்டமாகக்கொண்டியங்கும் சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறப்புக்கள் நீங்கள் பார்த்து வியந்து பாராட்டியதும் நாங்கள் நினைத்து நினைத்துப் பெருமைப் படுவதுமாகும்,

தென்னகத்தின் விடுதலை இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம், பிறந்த ஓராண்டு காலத்திற்குள்ளாகவே இங்கிருந்து சற்று முன்னாலுள்ள திடலில் சென்னை மாவட்டக் கழகத்தின் முதல் மாநாட்டினைக் கூட்டி, மாற்றாரின் கேலி கலந்த "ஆரூட மொழிகளை"ப் பொய்யாக்கி கழகத்தின் வயது சிறிதே ஆனாலும், அது வளர்கின்ற தன்மையுடையதாகும், சென்னை மாவட்டத்து மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி விட்டதாகும்; என்று ஊரும் உலகமும் தெரிந்து வியக்குமளவில், சீரிய திட்டங்களையும், சிறப்பான கொள்கைகளையும் அறிவித்து புதுத் தெம்பும் நம்பிக்கையும் மூளவிடும் வகையில் பணியாற்றினோம். அதற்குப் பிறகு இதே திடலில், இதே இடத்தில் இந்த நாட்டின் அரசியல் வரலாறு கண்டிராத—இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றிலேயே ஓர் திருப்பத்தை உண்டாக்கிய தி. மு. கழகத்தின் முதல் மாநாட்டை உடனிருந்து பணியாற்றி உலகம் முழுமைக்கும் நமது இயக்கத்தின் வலிவு பொலிவுகள் தெரிவதற்குரிய வகையில் துணை நின்று செய்து காட்டினோம்.

அதற்குப் பின்னால் 1953 சூன் திங்களில் நடைபெற்ற சென்னை மாவட்ட இரண்டாவது மாநாட்டில் பேசப்பட்ட கருத்துக்களும், செய்யப்பட்ட முடிவுகளும் அனைத்திந்திய அரசியல் வரலாற்றில் ஓர் இடத்தைப் பிடித்திருப்பவையாகும், சென்னை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டில் நமது கழகத்தின் முழு சக்தி இன்னதென எல்லோரும் அறிந்து கொள்ளும வாய்ப்பு கொடுத்த மும்முனைப் போராட்டத்திற்கான முகவுரை எழுதப் பெற்றது. இந்த மாவட்டத்துஇரண்டாவது மாநாட்டில் எழுதப் பெற்ற முகவுரையைத் தொடர்ந்து திரு இடத்தின் மக்கள் அனைவருமே ஒன்று சேர்ந்து விடுதலை என்ற ஓரே நினைவில் எழுதப்பட்ட வாசகங்கள் என்றும்—எப்போதும் — எல்லோர் நினைவிலும் அழியாது நிலைத்து விட்டிருக்கும் வீர வாசகங்களாகும். நூற்றுக் கணக்கானோர் அந்த வாசகங்களைத் தங்கள் தங்கள் குருதியால் எழுதினர். ஆயிரக்கணக்கானோர் நீண்ட சிறைச் சாலைகளின் நெடிய மதில் சுவர்களுக்குப் பின்னால் எழுதினர். விடுதலை சுதந்திரம் என்ற சொல்லுக்கு இதுவரை இந்த நாட்டில் இருந்து வந்த கருத்துக்கு வேறு பொருள் சொல்லி வீரம்விளைத்த இந்த மாவட்டத்தின் கழக வீரர்கள்—செயலாற்றல் மிக்க செம்மல்கள் மீண்டும் அப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தாருங்கள்—எங்கே இருக்கிறது, நமது பகைப் பட்டாளம் — எவ்வளவு தூரம் நாங்கள் இன்னும் பயணம் நடத்த வேண்டும் எனக் கேட்டு, நமது தலைவர்களின் கட்டளையை எதிர்நோக்கிக் காத்திருப்பதை இந்த மாநாட்டின் மூலம் வெளிப்படுத்த விரும்புகிறோம்.

இங்கு கூடியுள்ள பெரு மக்களே! இன்றுபோல் என்றும் நீங்கள் அளிதத ஆதரவினை எங்கள் மீது வைத்த நம்பிக்கையை நாங்கள் காப்பாற்றியே வந்திருக்கிறோம். தென்னாட்டவரைப் புண்படப் பேசுவதிலேயே தனி இன்பம் கண்ட பிரதமர் நேரு அவர்கள் கடந்த இரு ஆண்டுகளாகக் கண்ணியமான வார்த்தைகளையே பேசுமளவுக்கு நாகரீகப் படுத்தியது உங்கள் ஆதரவும் பக்க பலமும்தான். எங்கள் பாசறையில் பல வீரர்கள் பலியானார்கள்—பல தோழர்களின் குடும்பம் கலைந்து சிதறிப் போயிற்று—பலரின் உடல்கள் இயங்குவதற்கு லாயக்கற்றதாய் விட்டன. நூற்றுக்கணக்கான தலைகள் தையல் போடப்பட்டு உங்கள் முன்னிலையில் காட்சியளிக்கின்றன. பல நூறு கண்கள் பார்வை குன்றி ஒளி இழந்து கொள்ளும் வாய்ப்பை இழந்து கிடக்கின்றன. உங்கள் உற்சாக மொழிகளைக் கேட்டு மகிழாத அளவுக்கு நூற்றுக் கணக்கான காதுப்பறைகள் கிழித்தெறியப்பட்டன.

இவ்வளவு இன்னல்களும் நீங்கள் கொடுத்த ஆதரவைக் கொண்டு நமது சமுதாயத்தின் வெறுப்புணர்வை — சுடு சொல் வீசியே பழக்கப்பட்டவர்களிடம் காட்டிக் கொள்வதற்காக, கடந்த ஆண்டு ஜனவரித்திங்கள் 6-நாளில் கழகம் ஈடுபட்ட கருப்புக் கொடி நிகழ்ச்சியின் காரணமாக நாங்கள் பெற்ற பரிசில்களாகும்.

அன்று நாங்கள் செய்த தியாகம் வீண் போகவில்லை, நேருவின் நாக்கு அடக்கம் பெற்றது. சாதாரண வடவர்கூட சண்டப் பிரசண்டமாக தென்னாடு குறித்து பேசி வந்த தலைக் கிறுக்குத்தனமான பேச்சுக்கள் ஓர் முடிவுக்கு வந்தன.

எங்கள் கழகத் .தோழர்கள் ஏற்பட்ட இன்னல்களை அன்று வீரத்துடன் ஏற்றனர். பழம் புகழ் வாய்ந்த திராவிட சமுதாயம் .தமக்கிருக்கும் தன்மான உணர்வை அன்று வெளிப்படுத்திற்று. சென்னை பெருமக்களே நீவீர் வாழ்க! உங்கள் ஆதரவும் எங்களுக்கு எப்போதும்—எந்த நிலையிலும் தங்குக!

இங்கு அமர்ந்துள்ள கழகத் தோழர்களே! நீங்கள் எங்கள் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையயை நாங்கள் எப்போதும் காப்பாற்றியே வந்திருக்கிறோம். எங்களுக்கு நீங்களிட்ட ஆணைகள் எப்போதும் சரிவர நிறைவேற்றாமல் போனதில்லை, நாவடக்கமில்லாத பண்டிதருக்குப் பாடம் புகட்ட வேண்டுமா, அல்லது நாற்றமும் அழுக்குமிக்க சென்னைத் தெருக்களை சுத்தம் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமா, எதையும் உங்கள் அறிவுரைக்கும் ஆணைக்கும் உட்பட்டு ஒழுங்குற செய்துள்ளோம். எத்தனையோ இன்னல்களுக்கும்சோதனைகளுக்கும் சென்னை மாவட்டக் கழகம் ஆளாகியிருக்கிறது. இருந்தாலும் கடந்த பொதுத் தேர்தலில், காங்கிரசுக் கட்சிக்கு பலத்த அடிகொடுத்த பகுதிசென்னையேயாகும். இந்த மாவட்டத்தில் சட்ட மன்றஉறுப்பினர்கள்ஏழு பேரில் மூன்று பேர் கழக முன்னணி வீரர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது எங்கள் ஆர்வத்தையும், அயரா உழைப்பையும் வெளிப்படுத்துவதும், 'சென்னை பெருமக்கள் அளிக்கும் ஆதரவினை காட்டுவதுமாகும்.பொதுத் தேர்தலில் நமக்குத் துணை நின்ற சென்னை மக்கள், அண்மையில் நடைபெற்ற மாநகராட்சி மன்றத் தேர்தலிலும் சென்னை மாவட்ட தி. மு. கழகத்திற்கு முன்பைவிட பேராதரவு அளித்து வெற்றியுற செய்திருக்கின்றனர்.

இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள நான்கு முக்கிய மாநகரங்களில் இரு நகரங்கள் அதிகார வெறி பிடித்த காங்கிரசு கையிலிருந்து கழன்று போனதைக் குறித்துக் கதை கதையாக நாடே பேசிக் கொண்டிருந்த நேரத்தில், மூன்றாவது நகரமான சென்னையும், காங்கிரசின் கையிலிருந்து பறிபோனது இந்த நாட்டின் சனநாயகச்சக்திகளுக்கு பெரும் நம்பிக்கையூட்டும் ஓர் நல்ல அறிகுறியாகும்.

மாநகராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட 90 கழகத் தோழர்களில் சரி பகுதி 45 பேரைத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கி ஆதரவு அளிக்க முன்வந்த சென்னை பெருமக்களுக்கும் எங்கள் மாவட்டத் தோழர்களுக்கு அறிவுரைகள் கூறி நேர்வழி செலுத்திய கழக தலைவர்களுக்கும், சென்னை மாவட்ட கழகத்தவர்களாகிய நாங்கள் என்றென்றும் கடமைப் பட்டவர்களாவோம்,

கடந்த காலத்தில் நாங்கள் ஆற்றியுள்ள பணிகளைக் கண்டு நீங்கள் அனைவரும் பாராட்டி பெருமைப்படுத்துவதுபோலவே எங்கள் எதிர்காலப் பணிகளுக்கும் ஆதரவு நல்க வேண்டுமெனக் கோரி இங்குள்ள பெருமக்கள் அனைவரையும் நல்வரவு கூறி வரவேற்கிறேன்.

இந்த மாநாட்டினை நமது மதிப்புக்கு அன்புக்கும் உரியவரான அருமைத் தோழர் ஆர்வத் துடிப்புமிக்க எழுத்தாளர் அரங்கண்ணல் அவர்கள் திறந்து வைக்கிறார்,

இந்த மாநாட்டினை நமது மதிப்பிற்குரியவரும், திறமை பெற்ற எழுத்தாளருமான தோழர் T. K. சீனிவாசன் அவர்கள் தலைமை தாங்கி சீரும் சிறப்புமாக நடத்திக் கொடுகக இருக்கிறார்.

அறிஞர் அண்ணா, பொதுச்செயலாளர் நாவலர்

19-ம் பக்கம் பார்க்க

காந்தியாருக்கே சுதந்திர உணர்ச்சியை ஊட்டியது தென்னகம் தான்!

இதை அந்த உத்தமரே ஒப்புக் கொண்டிருக்கிறார்!

காந்தி சீடர்களுக்கு மதியழகன் தெளிவுரை!

தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

சென்னை மாவட்டத்தின் மூன்ருவது மாநாடு மிகச் சிறப்பாக நடைபெறுவதைக் கண்டு நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்! நம்முடைய வளர்ச்சியையும், நாம் சாதித்துள்ள பெரும் சாதனைகளையும் பற்றி எண்ணி பூரிப்படைகிறேன்! முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டு இந்த பத்தாண்டு காலத்தில் யாரும் சாதிக்காத பெரிய பெரிய சாதனைகளையெல்லாம் சாதித்திருக்கிறோம்! இதைக் கண்டு எவருமே பெருமைப் படத்தான் செய்வார்கள்! ஆனல் அதே நேரத்தில் மறைந்த மாவீரன் திரு. பாலசுப்பிரமணியத்தைப் பற்றி நினைக்கும் போது நெஞ்சம் வேதனைப்படாமல் இருக்க முடியாது!

நாம் ஒரு போதும் நமது இலட்சியத்திலிருந்து பிசகியதில்லை! நமது குறிக்கோளிலிருந்து தவறியதில்லை! துப்பாக்கி குண்டுகளுக்கு பயந்து ஓடியதுமில்லை! நாம்நமது இலட்சியங்களுக்காக எத்தனையோ தியாகங்களை செய்திருக்கிறோம்!

திராவிடத்தின் வளத்திற்கு, வாழ்வுக்கு அண்ணு காட்டும் மார்க்கம் தான் சிறந்ததாகும், வழிவகையை அளிக்கும் என்று திடமாக நம்பி வருகிறோம்!

வானத்தில் தோன்றிடும் நட்சத்திரத்தின் ஒளியால் ஒரு உருவத்தைப்பார்க்க முடியாது! ஆனல் திடீரென்று தோன்றுகின்ற மின்னலின் உதவியால் ஒரு உருவத்தைப் பார்க்க முடியும்! அது போலத் தான் சமீபத்தில், நகரசபை ஆண்டு விழாவில் திரு. சஞ்சீவி ரெட்டி ஆற்றிய உரையும்—டெல்லி அமைச்சர் மனுபாய்ஷாவின், "டெல்லியிலே ஏராளமான அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன" என்ற பேச்சும்-வடக்கிலிருந்து,தெற்கு பிரிந்துதீருவது உண்மையென்று நிரூபிக்கிறது!

சாதாரணமாக விளையாட்டுப் போட்டியில் கூட வடநாட்டுக்காரர்களுக்கு அதிகமான சலுகைகள் அளிக்கப்படுகின்றன!

தெற்கு, தென்னகம் பல விதத்திலும் வடநாட்டுக்காரர்களால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது! நமது தென்னகம் இதுவரை எவருக்குமே அடிமைப் பட்டு வாழ்ந்தது கிடையாது! காந்தியாருக்கே சுதந்திரஉணர்ச்சியை ஊட்டியது நமது தென்னகம் தான்! இதை காந்தியாரே சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறி இருக்கிறார்!

சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டு வீர தியாகம் புரிந்தவர்கள் தென்னகத்தில் தான் மிக மிக அதிகமாகும்! தென்னகதது தியாக வீரர்களையெல்லாம் காங்கிரஸ்காரர்கள் மறந்து விட்டார்கள்!

இது குறித்து காந்தியாரே வருத்தப்பட்டு பேசி இருக்கிறார்! "விடுதலைப் போரில் பங்கு கொண்டு உயிரைத் துறந்த தில்லையாடி வள்ளியம்மைக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டிய தென்னுடு" தன்னையும் தன் மனைவியையும் விளம்பரப்படுத்தி வருகிறது என்று வருத்தத்தோடு காந்தியார் பேசி இருக்கிறார்! "சுதந்திரப் போராட்டத்திற்கே தென்னகம் தான் வழி காட்டியது" என்றும் உத்தமர் காந்தியார்உண்மையை எடுத்துச் சொல்லி இருக்கிறார்!

தென்னகம் ஒரு துறையில் மட்டுமல்ல எல்லா துறைகளிலும் புறக்கணக்கணிக்கப்பட்டே வருகிறது! இதை தடுத்து நிறுத்தி திராவிடத்தைப் பெற அனைவரும் பாடு பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அதற்கான முயற்சியில் எல்லோரும் ஈடுபட வேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்!

நமது விடுதலை முழக்கம் ஒரு நாள் வெற்றி பெற்றே தீரும்!

"ஹோம் லண்ட்" வெங்கடாசலம் எழுப்பும் விடுதலைப் பரணி!

தலைவர் அவர்களே! இங்கு குழுமியுள்ள பெரியோர்களே! தாய்மார்களே! வடவருக்கு அடிமைப் பட்டுக் கிடக்கும் நமது தாயகத்தையும், நமது தாயகத்தில் வாழும் திராவிட மக்களையும் மீட்டுத் தரும் பணியில் நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டிருக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு விடுதலை இயக்கம்! ஒரு விடுதலை இயக்கத்திற்கு எந்த நாட்டிலுமே ஆரம்பகாலத்தில் ஆதரவு இருந்ததாகத் தெரியவில்லை! ஒரு நாட்டிலே விடுதலை இயக்கம் ஆரம்பித்தவுடனேயே "ஆகா, இது நல்ல இயக்கம், நாட்டுக்கு தேவையான இயக்கம்" என்று எவருமே வரவேறறதில்லை!

அயர்லாந்து நாடு முன்னூறு ஆண்டு காலம் ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது! அந்த நாட்டை விடுவிக்க, விடுதலை வேட்கைக்கொண்டவர்கள் பலர் பல போராட்டங்களை நடத்தினர்கள்! ஆங்கிலேயனை விரட்டியடிக்க அயர்லாந்தில் விடுதலை இயக்கம் தோன்றிய காலத்தில் அந்த இயக்கத்திற்கு எவருமே அதரவு தரவில்லை! மேதை ஜார்ஜ் பெர்னுட்சா கூட அயர்லாந்து விடுதலை வீரர்களைப் பார்த்து—"பைத்தியக்காரர்கள்" என்று ஏசினர்! இத்தனைக்கும் ஜார்ஜ் பெர்னுட்சா பிறந்த மண் அயர்லாந்து தான்!

ஜார்ஜ் பெர்னுட்சா தான் பிறந்த நாட்டை விடுவிப்பதே "பைத்தியக்காரத்தனம்" என்று கூறுருரென்ருல் மற்றவர்கள் எப்படி எப்படி தாக்கி இருப்பார்கள். தூற்றி இருப்பார்கள்!

சின்னஞ் சிறிய சைப்ரஸ தீவு விடுதலை கேட்ட போது—"சைப்பிரஸ் தனித்து வாழுமா? அதற்கு பொருளாதார பலம் உண்டா" என்று பலர் கேட்டனர்! "இங்கிலாந்து படை அங்கு வந்துதங்குவதால்தான், இராணுவபலம் இருப்பதால்தான், சைப்ரஸ தீவுக்கு மகிமையே தவிர—அதற்குப் பொருளாதர பலம் ஏது" என்று ஏகாதிபத்திய வெறியர்கள் கூறினர்கள்!

அதே போல் தான் இன்று நம்மைப் பார்த்தும் கூறுகிறார்கள்! "திராவிட நாடு பிரிந்தால் பொருளாதாரத்திற்கு என்ன செய்வீர்கள்" என்று கேட்கிறார்கள்! திராவிடத்தின பொருளாதாரம் புரியாதவர் தான் இப்படிப் பேசக் கூடும்! திராவிடம் பிரிந்தால் நல்ல வளத்தோடு வாழ முடியும்!

வடக்கு வேறு, தெற்கு வேறு என்ற எண்ணம் எல்லா மக்களிடத்திலும் வேறுன்றத் தலைப்பட்டு விட்டது! இதைஎவராலேயுமே இனி அழிக்க முடியாது! நமது இலட்சியம். நமது கொள்கைகள் எங்கும் பரவத் தொடங்கி விட்டன! இன்று இல்லா விட்டால் என்ருவது ஒரு நாள் நமது விடுதலை முழக்கம் வெற்றி பெற்றே தீரும்! அதற்கான பணிகளில் நாம் அனைவரும் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்!



இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஏ. மதியழகன், பொதுச் செயலாளர் நெடுஞ் செழியன், துணை மேயர் சிவசங்கரன் முதலியோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.

நம் கருத்துகளை எடுத்துச் சொல்லுங்கள்!

கழகத்தை மேலும் மேலும் வலிவுப் படுத்துங்கள்!

வளர்ந்திருக்கிறோம்! ஆனாலும் இன்னும் வளர வேண்டும்!

அதற்கு தியாக உணர்ச்சி வேண்டும்! அதை முதலில் பெறுங்கள்!

7-ம் பக்கத் தொடர்ச்சி

பார்க்கிறோம். இதற்குத்தான் இந்தக் கண்கள் பயன்படவேண்டும் என்று நம் உள்ளம் எண்ண வேண்டும். நம்முடைய ஒவ்வொரு சொட்டு இரத்தமும்— உழைப்பால் கிடைக்கும் மிச்சப்படும் ஒவ்வொரு காசும் நம் கழகத்தின் தூய தொண்டிற்காகப் பயன்படும் என்று கூற வேண்டும். நாம் அறிவாற்றல் பெற்றோமானால் நமது அறிவாற்றல் கழகத்திற்கு பயன் பெற வேண்டுமென்று நினைக்க வேண்டும். கலைத் துறையிலே முன்னேறினால் இயக்கத்திற்கு பயன் பெற வேண்டுமென்று நினைக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் தங்களுக்கு கிடைக்கின்ற ஓய்வு நேரத்தை கழகத்திற்காக நல்ல விதத்தில் பயன்படுத்த வேண்டும். நமக்கு இருக்கிற அறிவை—ஆற்றலை உழைப்பை நம்முடைய குடும்பத்திற்கு மட்டுமின்றி இந்த நல்ல காரியத்திற்காகப் பயன்படுத்த வேண்டும். நாம் எந்த எந்த துறையில் முன்னேறியிருக்கிறோமோ அந்தத் துறையில் எல்லாம் கழகத்தின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட வேண்டும். கலைத் துறையில் முன்னேறியிருந்தால் அந்தத் துறையில் கழகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டும்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் இங்கு வீற்றிருக்கும் நமது இலட்சிய நடிகர் இராஜேந்திரன் தேடிய செல்வமெல்லாம் நம் கழகத்துக்கு கிடைத்த செல்வமாகும். அவை அத்தனையும் நம் கழகத்துக்காகவே அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றுகூடச் சொல்லலாம்.

நமது இலட்சிய நடிகரின் எதிரிலே ஒரு அழகிய மங்கையை கொண்டு வந்து நிறுத்தி அவளது கையைப் பிடித்துக் கொண்டு உலாவச் சொல்லி படம் பிடிக்கிறார்கள். அழகிய மங்கையின் கையைப் பிடித்துக் கொண்டு பூஞ்சோலையிலே உலாவுவதுபோல நடிப்பதற்காக பல்லாயிரக்கணக்கான ரூபாயைப் பெறுகிறார். அழகிய மங்கையின் கையை பிடித்துக் கொண்டு உலாவுவதையே பெரிய வாய்ப்பாக நினைக்கும் இளைஞர்கள் பலர் இங்கே இருக்கலாம். ஆனால் நமது இலட்சிய நடிகர் இராசேந்திரனோ அழகிய மங்கையின் கையைப் பிடித்துக்கொண்டு பூஞ்சோலையிலே உலாவி, அதற்காக பல்லாயிரக்கணக்கான ரூபாயைப் பரிசாகப் பெறுகிறார். இப்படிப்பட்ட வாய்ப்பு நமது இராசேந்திரனுக்கோ நிறைய கிடைக்கிறது. இப்படிப்பட்ட வாய்ப்புடன் ஏராளமான பணமும் கொடுத்து கூப்பிட பலர் காத்திருக்கின்றனர்! இப்படிப்பட்ட நம் தம்பி இராசேந்திரன் சிதம்பரம் தேர்தல் பிரசாரத்துக்காக வந்தார். ஏரிக் கரையானாலும், சேரிக் குப்பமானாலும் அங்கெல்லாம் சென்று தேர்தல் பிரசாரம் செய்தார். இங்கெல்லாம் கற்கள் நிறைய இருக்குமே என்றால் "ஆ" கற்களா அவை என்னுடைய கொள்கைகள் அல்லவா" என்றார். ஐயோ வழியெல்லாம் முட்களாச்சே என்றால் "முட்கள்தானே, அவை என்னுடைய இலட்சியங்கள்" என்று சொல்லி சுமார் நூறு கிராமங்களுக்கு மேல் கல்லிலும், முள்ளிலும் கால்நடையாகவே சென்று தேர்தல் பிரசாரம் செய்துவிட்டு திரும்பியிருக்கிறார்!

அதோ வீற்றிருக்கிறார், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, அவரை சில நேரங்களில் எனக்கு உள்ள அலுவல்களின் காரணமாக நண்பன் என்ற முறையில் நான் மறந்துவிட்டாலும் இங்கே கூடியுள்ள நன்றி மறவாத மக்கள் மறக்கமாட்டார்கள். அவர் நமது கழகத்திற்காக அரும்பாடுபட்டவர். அவர் தூத்துக்குடி முதல் சென்னை துறைமுகப்பட்டிணம் வரை சுற்றி வந்திருக்கிறார், அவர் போகாத ஊரில்லை, நாடகம் நடத்தாத நகரமில்லை. அவரை அறியாதமக்கள் இல்லை. கழகத்திற்காக திரட்டாத நிதி இல்லை, கழகத்திற்கென்று எண்ணற்ற நாடகங்களை நடித்து திரட்டி தந்த நிதி கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால் அவருக்கென்று செல்வம் அதிகமாக இல்லை.

அடுத்தபடியாக நீங்கள் எல்லாம இங்கு வருவார் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும் நமது கழகத்திற்காக அரும்பாடுபட்டு வருகிறார். அவர் இப்போதுள்ள நிலையில் இங்கு வருவது சரியல்ல என்று டாக்டர் சொல்லியுள்ள காரணத்தால் இங்கு வரவில்லை. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களும் அவர் ஈட்டிய பொருளையும், தமது உழைப்பையும் கழகத்துக்கு அளித்து வருகிறார். இப்படிப்பட்ட தியாக சுபாவம் தான் இந்த கழகத்தை வளர்த்து வருகிறது.

'திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கு என்ன தெரியும்? பளபளப்பாக உள்ள நடிகர்களைக் கொண்டு வந்து கூட்டம் போடத்தான் தெரியும் என்று சிலர் கூறுகிறார்கள். அவர்கள் வெறும் பளபளப்பு நடிகர்கள் என்ற காரணத்திற்காக இப்படிப்பட்ட பெரிய கூட்டம் கூடிவிட வில்லை. அரசியலில் உள்ள அந்தக் கலைஞர்கள், கலைத்துறையில் தங்களுக்கு கிடைப்பதைத் தங்களுடைய கட்சிக்கு காணிக்கையாக்குகிறார்கள். இப்படி நம் கழகத்திலுள்ள எல்லாத் துறையினரும், தங்கள் வாழ்வை செல்வத்தை கழகத்தினிடத்தில் ஒப்படைக்கக் காத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட மரபு.

தொண்டுள்ளம் பரவி இருப்பதால்தான் இன்று இந்த மாவட்ட மாநாடு சென்ற மாநில மாநாட்டைப் போல வளர முடிந்தது என்பதை நாம் உணரவேண்டும் "அடுத்த மாநில மாநாட்டை எந்த ஊரில் நடத்தப்போவதாக இருக்கிறீர்கள்" என்று என்னை நண்பர்கள் கேட்டார்கள்.

அதற்கு நான் "மதுரையிலோ அல்லது கோவையிலோ நடத்துவதாக இருக்கிறேன்" என்று சொன்னேன். இரண்டு இடத்தில் உள்ளவர்களும் தாங்கள் தங்கள் இடத்தில்நடத்தவேண்டுமென்றுகேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மாவட்ட மாநாட்டிற்கே இப்படிப்பட்ட பெரியதொரு கொட்டகையை அமைக்க வேண்டியிருக்கிறதே — மாநில மாநாட்டுக்கு எத்தனை பெரிய கொட்டகை அமைக்கவேண்டியிருக்குமோ—அப்படிப்பட்ட கொட்டகை அமைக்க போதுமான இடவசதிகிடைக்குமா என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

மதுரையிலோ, கோவையிலோ அவ்வளவு பெரிய திடல் கிடைக்குமா கிடைக்காதா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. எனவே நாம் நமது வளர்ச்சிக்கேற்ற வசதியைப் பெறவில்லை. அதனால் நாம் நமது வளர்ச்சிக்கெற்ற வசதியைப் பெற முயல வேண்டும்.

நாம் இந்தமாநாட்டில் நினைக்க வேண்டியது என்ன முதலாவதாக நமது கழகத்திற்காகத் தியாகம் செய்தவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துதல் வேண்டும்,

இரண்டாவதாக நாமெல்லோரும் தியாக உணர்ச்சி பெற வேண்டும் என்று நினைக்கவேண்டும். மூன்றாவதாக நமது வளர்ச்சிக் கேற்ற வாய்ப்பும் வசதியும் பெற முயல வேண்டும்.

"1959-ல் நாம் இந்த வசதியைப் பெற்றிருக்கிறோம், இவ்வளவு வளர்ச்சியும் பத்து ஆண்டு காலத்திலேதான நாம் பெற்றுள்ளோம் என்று நானே இன்று பிற்பகல் நினைத்து ஆச்சரியப்பட்டேன், மெத்த மகிழ்ச்சியும் பூரிப்பு மடைந்தேன்.

காங்கிரஸ் துவக்கிய காலத்திலே அதனுடைய பத்தாவது ஆண்டிலேயும் அவர்கள் இப்படிப்பட்ட கொட்டகைகள் அமைக்காமல் மண்டபங்களிலே தான் மாநாடு நடத்தினார்கள். அவர்கள் நடத்திய மாநாட்டில் யார் இருந்தார்கள் இலட்சாதிபதிகளும் கோடீசுவரர்களும், வெள்ளையருக்கு வெண்சாமரம் வீசுபவர்களும் தான் இருந்தனர்-

"நமது கழகம் ஆரம்பித்த பத்து ஆண்டு காலத்தில் பெற்றிருக்கின்ற வளர்ச்சியை காங்கிரஸ் கட்சி தனது பத்தாவது ஆண்டில் பெற்றிருந்த வளர்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உள்ளபடியே உண்மையான காங்கிரஸ்காரர்கள் வெட்கப்படுவார்கள். அப்போது அவர்கள் கூட்டிய மாநாடுகளுக்கு தலைமை வகித்தவர்களெல்லாம் யார்? இங்கிலாந்திலிருந்து வெள்ளையாகள் வரவழைக்கப்பட்டார்கள். இலட்சாதிபதிகள். கோடீசுவரர்கள் அவர்கள் கூட்டிய மாநாடுகளுக்கு தலைமை வகித்தார்கள்.

"இன்று இந்த மாநாட்டிற்கு இங்கே தலைமை வகிக்கும் நமது தோழர் டி. கே. சீனிவாசன் யார்? அவர் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். பாட்டாளி வர்க்கத்திலே இருந்தவர். இரயில்வேயில் ஒரு தொழிலாளியாக பணியாற்றி வந்தவர். ரயில்வே இலாகாவில் பணியாற்றி வந்தால் இயக்கத்திற்காக முழுமூச்சுடன் உழைக்க முடியாது என்ற காரணததிற்காக தனதுவேலையை ராஜினமா செய்தவர்.

காங்கிரசையும், கழகத்தையும் பணத்தில் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்கள் மலை—நாம் மடு என்று கூறலாம். அவர்கள் கட்சியிலேலட்சாதிபதிகள் கோடிசுவரர்கள் இருந்தார்கள். லட்சாதிபதிகள், கோடிசுவரர்கள் என்று நினைப்பதற்கே பயமேற்படுகிறது. கனவிலே கண்டால்கூட பயமேற்படும்.

"பட்டம்பதவி, பராட்டுகோரினவர்களைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டு அவர்களுடைய ஆதரவிலே வளர்ந்து வருவது தான் காங்கிரசு. காங்கிரஸிலே இருப்பவர்கள் டாட்டா, பிர்லா, பஜாஜ், முந்திரா ஆகியவர்கள், அத்தகையவர்கள் நம்மிடம் இருப்பார்கள் என்று கனவிலும் காண முடியாது,

நாம் பத்தாண்டு காலத்திலே எவ்வளவு வளர்ச்சியைப் பெற்றிருக்கிறோம். காங்கிரஸ் துவக்கி எழுபது ஆண்டு காலமாகிறது, அது எவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்கிறது. இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் இந்தக் குறுகிய காலத்தில் எவ்வளவு பெரிய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறோம் என்று தெரியும்,

எனவே நாம் பெற்றுள்ள வளர்ச்சியை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும், என்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்,

தி.மு.க.வில் இருப்பவர்கள் உலக அரசியல் தெரிந்தவர்கள்!

அண்ணாதுரை இல்லாவிட்டால் எல்லாத் துறையுமே நடக்காது!

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டல் என்று தெரிந்து வைத்துக்கொண்டே பேசுவாராம்!

ஆபிரகாம்லிங்கன் 15 வயதிலிருந்தே பேச ஆரம்பித்தானாம்! எங்கே உட்கார்ந்திருந்தாலும் சிந்தனை வரும் போதெல்லாம் துண்டு, துண்டு தாள்களில் எழுதி தன் தொப்பிக்குள் போட்டுக் கொள்வானாம்! நேரம் கிடைக்கிற போது தன் தலையிலிருக்கும் தொப்பியை கழட்டி அந்த துண்டு காகிதங்களை எடுத்து ஒன்றாக இணைத்து படித்து, படித்து மனப் பாடம் செய்து மேடையில் ஒப்புவிப்பானாம்!

இந்த நாட்டில் தான் பேச்சில் என்ன இருக்கிறது — தி. மு. க.வுக்கு பேசத் தானே தெரியும் என்று கேட்கப்படுகிறது!

"திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அழகாகப் பேசுவார்கள், அடுக்கு மொழியில் பேசுவார்கள், அலங்காரமாகப் பேசுவார்கள் மயங்கி விடாதீர்கள். ஏமாந்து விடாதீர்கள்" என்று சொல்லப்படுகிறது!

சட்டசபையில் பிரிபஸ்போக்குவரத்தை தேசிய மயமாக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வரப்பட்டது! அந்த தீர்மானத்தை ஆதரித்து அறிஞர் அண்ணா - அவர்கள் பேசினார்கள்!" பஸ் தொழிலை தேசிய மயமாக்கினால் தன் நாங்கள் திருப்திபடுவோம்" என்றும் கூறினார்கள்! "பேச்சில் என்ன இருக்கிறது பேசத் தான் தெரியும்" என்று சொல்லி வரும் செயல் வீரர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து காமராஜரும், கக்கனும் கிண்டல் செய்தார்கள். கேலி செய்தார்கள்! சினிமாத் தொழிலை தேசிய மயமாக்கலாமா என்று காங்கிரஸ்காரர்கள் கேட்கிறார்கள்!

நாங்கள் என்னமோ-ஜெமினி ஸ்டுடியோவுக்கும், பரணி ஸ்டுடியோவுக்கும் அதிபராக இருப்பது போலவும், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனுக்கும், எஸ். எஸ். ராஜேந்திரனுக்கும் மட்டுமே சினிமா உலகம் சொந்தமாய் இருப்பது போலவும்— இவர்கள், சினிமா தொழிலை தேசிய மயமாக்கினால் நாங்கள் பயந்து விடுவது போலவும் எண்ணி—"சினிமா தொழிலை தேசியமயமாக்கலாமா" என்று எங்களைப் பார்த்து கேட்டு நையாண்டி செய்தார்கள்!

நமது அண்ணா அவர்கள்— "நீங்கள் சினிமாத் தொழிலை தேசிய மயமாக்கினால்—நானும், என் தம்பிமார்களும், திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள எழுத்தாளர்களும் இலவசமாகவே கதை எழுதி தருகிறோம்" என்று சுடச் சுட பதில் சொன்னார்!

பஸ் தொழிலை ஏன் இவர்கள் தேசிய மயமாக்க அஞ்சுகிறார்கள்! பஸ் முதலாளிகள் அனைவரும் காங்கிரஸ்காரர்கள் தான்! ஏறத்தாழ 18 பஸ் முதலாளிகள் காங்கிரஸ் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்! மற்றவர்களும் பஸ் முதலாளிகளால் அனுப்பப்பட்டவர்கள்! பஸ் முதலாளிகள் இல்லையேல் அவர்களில் 150பேர் சட்டசபையில் இல்லை என்று பொருள்! காங்கிரஸ்காரர்களுடைய உயிர் பஸ்முதலாளிகளின் கையில் தான் இருக்கிறது!

உங்களில் பல பேருக்கு மயில்ராவணன் கதை தெரியுமென்றே நினைக்கிறேன்! காங்கிரஸ்காரர்களின் போக்கை நினைக்கும் போது எனக்கு மயில்ராவணன்—அனுமார் சண்டைதான் நினைவுக்கு வருகிறது!

மயில்ராவணனை எப்படி கொல்லுவது என்று யோசிக்கப்படுகிறது! மயில்ராவணனை கொல்ல வேண்டுமானால் அவன் உயிர் இருக்கும் இடத்தை கண்டு பிடித்து அவனை கொல்ல வேண்டும்! "மயில்ராவணனுக்கு உயிர் எங்கே இருக்கிறது" என்று அனுமார் கேட்க — பத்து யோசனை தூரத்தில் ஒரு தடாகம் இருக்கிறது—அந்த தடாகத்தில் ஒரு தாமரை இருக்கிறது — அந்த தாமரையில் தண்டு இருக்கிறது — அந்தத் தண்டு வழியாகச் சென்றால் ஒரு சுரங்கம் இருக்கும்—அந்த சுரங்கத்தில் ஒரு மாடம் இருக்கும், அந்த மாடத்தில் ஒரு டப்பா இருக்கும்— அந்த டப்பாவைத் திறந்து பார்த்தால் ஒரு வண்டு இருக்கும், அந்த வண்டு விடத்தில்தான் மயில்ராவணனின் உயிர் இருக்கிறது! அந்த வண்டுவை நசுக்கினால் மயில்ராவணனின் உயிரும் போய்விடும்" என்று ஒரு கதை இருக்கிறது!

அதேபோல்தான் பஸ் முதலாளி என்னும் வண்டுவை பிடித்து நசுக்கினால் காங்கிரஸ் கட்சியும் செத்து விடும்!

இதுவரையில் இவர்கள் இதற்கு என்ன சமாதானம் சொன்னார்கள்? நேரடியாகவும், ஒழுங்காகவும், முறையாகவும் இதற்கு ஓர் சமாதானத்தை சொல்ல முடியாது! இவர்கள் தான் பெரிய செயல் வீரர்களைப்போல் பேச்சில் என்ன இருக்கிறது, தி. மு. க.வுக்கு பேசத்தானே தெரியும் என்கிறார்கள்!

இந்த நாட்டு மக்களின் அன்றாட வாழ்வைப் பற்றிப் பேசுகிறோம், நாட்டின் நிலையைப் பற்றி பேசுகிறோம்! இவர்களோ பேச்சில் என்ன இருக்கிறது என்கிறார்கள்!

வீராதி வீரர், சூராதி சூரர் மார்த்தாண்டல்போல், உப்பில்லாமல் கல கஞ்சியை குடிக்கும் வீரர்களைப்போல் "என்ன சாதித்து விட்டார்கள், என்ன சாதித்து விட்டார்கள்" என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள்! நீங்கள்தான் என்ன சாதித்தீர்கள்? அதைச் சொல்லுங்களேன்?

வீராதி வீரனே! தேசியத் தோழனே! அமைச்சர்களே! நாடாள வந்தவர்களே! இது வரை நீங்கள் சாதித்ததுதான் என்ன?

சுதந்திரம் வந்தால் சுகம் கிடைக்கும் என்று சொன்னாய்? சுதந்திரமும் வந்து 12 ஆண்டுகளுக்குமேல் ஆகின்றன! இது வரையில் நீ உணவுப் பிரச்னையைத் தீர்த்தாயா? ஆரம்ப காலத்தில் ஆறு அவுன்சாய் இருந்தாய்! பிறகு அது புண்ணாக்காக மாறிற்று! புண்ணாக்கிலிருந்து பருத்தி கொட்டைக்கு வந்தாய்! பருத்தி கொட்டையிலிருந்து கிழங்கு, அதற்குப்பிறகு இன்னும் எதை எதையோ சாப்பிட சொன்னாய்! 12 வருட கால ஆட்சியில் நீ சாதித்தது இவைகள்தானே?

தனி உணவு மண்டலம் வேண்டும் என்று வற்புறுத்தி சொன்னீர்கள்! வடக்கே மட்டும் தனி உணவு மண்டலம் இருக்கும் போது, தெற்கே ஏன் தனி மண்டலமாக இருக்கக்கூடாது என்று கேட்கப்பட்டது அதெல்லாம் ஒன்றுமில்லை என்று மழுப்பி ஜால வித்தை காட்டினார்கள்! உன்னால் இந்த காரியத்தைகூட செய்ய முடியவில்லை! உணவுப் பிரச்னையைத் தீர்க்க வழிசெய்ய முடியவில்லை! நீ சொல்லுகிறாய் பேச்சில் என்ன இருக்கிறது என்று!

உணவுப் பிரச்னை தீருவதற்கு ஒரே ஒரு வழி திராவிட நாடு திராவிடருக்கே ஆவதுதான்! அதற்காகத்தான் அறிஞர் அண்ணா ஒரு மாபெரும் விடுதலைப் படையை நடத்தி வருகிறார்! அந்த விடுதலைப் படையின் பணியினால் தான் இந்த நாட்டுப் பிரச்னைகள் அனைத்தும் தீர்க்கப்படும்.

இங்கு, நேற்று பேசப்பட்ட கருத்துகளும், இன்று நிறைவேற்றப்பட்டிருக்கிற தீர்மானங்களையும் மனதில் எண்ணி அனைவரும் பணிபுரிய வேண்டும்!

நமது அறிஞர் அண்ணா அவர்கள் இல்லாத இடமே இல்லை!

நமது அண்ணா இலக்கியத் துறையிலே இருக்கிறார், சமுதாயத் துறையிலே இருக்கிறார், பேச்சுத்துறையிலே இருக்கிறார், மேடைத் துறையிலே இருக்கிறார், எழுத்துத் துறையிலே இருக்கிறார், பொருளாதாரத் துறையிலே இருக்கிறார்! அண்ணாதுரை இல்லாவிட்டால் எந்தத் துறையுமே நடக்காது!

இசைத் துறையானாலும் சரி, படத் துறையானாலும்சரி, வேறு எந்தத் துறையானாலும் சரி அங்கெல்லாம் நமது அறிஞர் அண்ணா அவர்கள் அமர்ந்துள்ளார்கள்! இதுதான் மக்கள் சக்திக்கு அடையாளம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை எப்படி வேண்டுமானாலும் தூற்றட்டும். நாம் அதைப்பற்றி துளியும் கவலைப்படவில்லை!

நம்மை தேசத் துரோகிகள் என்று கூறுவார்கள், கூறட்டும்!

தி.மு.க. கொள்கையற்ற கட்சி என்று சொல்லக்கூடும்! சொல்லட்டும்! நம்முடைய கொள்கைகள் அத்தனையும் மக்கள் உள்ளத்திலே பதிந்து விட்டன! இந்த இலட்சியத்தை யார் இகழ்ந்தாலும் நாம் விட்டுவிடப் போவதில்லை!

நாம் வளம் கொழிக்கும் நாட்டிலே பிறந்தவர்கள்! அன்றொரு நாள் நமது கடல் கொழித்த முத்துக்காக, மயில் தோகைக்காக, மலைப் பாம்பின் தோலுக்காக ஏங்கிக் கிடந்தனர்! நாம் பெருமையோடு வாழ்ந்தவர்கள், புகழோடு வாழ்ந்தவர்கள்! எனவே இழந்த புகழை, பெருமையை மீட்க வேண்டும்!

நம்முடைய கொள்கைகளை வடநாட்டுக் கங்காணிகளால், அழிக்க முடியாது, நிச்சயமாக அழிக்க முடியாது! எனவே அவர்களைப் பற்றி நாம் கவலையேதும் கொள்ளாமல் பணிபுரிய வேண்டும்! திராவிட நாட்டின் விடுதலைப் போரில் அனைவரும் பங்கு கொண்டு நம் தாயகத்தை மீட்கவேண்டும்! அடுத்து நமது அண்ணா அவர்கள் பேச இருப்பதால் "என் பேச்சில் என்ன இருக்கிறது" என்று கூறி முடித்துக் கொள்ளுகிறேன்!

கலைமணம் கமழும் திரை ஏடு!
எங்கும் விற்பனையாகிறது
கலைச்சோலை
(மாதம் இருமுறை)
விலை 12 காசு வருட சந்தா ரூ. 3
ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டும் ஏஜண்டுகள் மட்டும் எழுதவும்.
விபரங்களுக்கு
கலைச்சோலை
சென்னை-17.

ஏகபாரதமாம் ! அங்கே சாப்பாடு முதல் சங்கீதம் வரை ஒன்றாம் !

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் தான் நம்மைப் பார்த்து "உங்கள் திராவிட நாட்டின் எல்லைக்கோடு எது" என்று கேட்கிறார்கள்! ஒரு நாட்டின் விடுதலைப் பிரச்னையையோடு எல்லைப் பிரச்னையை கொண்டு வந்துவாதாடுவது அர்த்த மற்றதாகும்!

நமது அறிஞர் அண்ணா அவர்களும், மற்றும் உள்ள தோழர்களும் வடநாடு நம்மை வஞ்சித்து வருகிறது என்பதற்கு தக்க ஆதார விளக்கத்தோடு எடுத்து கூறி வந்தால் "வடக்காவது தெற்காவது" என்று சொல்லுகிறார்கள்! நான்கு மாநிலங்களும் இணைந்து திராவிட கூட்டாட்சி நடத்த வேண்டுமென்றால் "நடக்குமா, ஆகுமா" என்று கேலி பேசிவருகிறார்கள்! ஆனால் ஆந்திர நாட்டு முதலமைச்சர் இதே வார்த்தையை சொன்ன போது இவர்கள் என் வாய் மூடி மௌனிகளாக இருந்தார்கள் என்பது தான் நமக்குத் தெரியவில்லை!

நமது மேயர் அரசு அவர்கள் திரு.சஞ்சீவி ரெட்டியையும், திரு காமராஜரையும் அழைத்து நகர சபையின் ஆண்டு விழாவை நடத்தினார்கள்! ஆந்திர நாட்டு முதலமைச்சர் கனம் சஞ்சீவி ரெட்டிக்கு பக்கத்திலே நமது மேயர் அரசுவும், மேயர் அரசுவுக்குப் பக்கத்திலே கன்னத்தில் கையை வைத்தபடி கனம் காமராஜரும், அவருககுப்பக்கத்திலே லூர்த அம்மையாரும் உட்கார்ந்திருந்தார்கள்! அங்கே திரு.சஞ்சீவி ரெட்டி —"டில்லியிலே ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிறவர்கள், உச்சாணி கொம்பிலே உட்கார்ந்து கொண்டு, மிக மிக கேவலமாக மதித்து வருகிறார்கள், இதை நாம் சகித்துக் கொண்டிருக்க முடியாது! நம்மவர்கள் ஒன்றுபட்டு, இங்குள்ள நான்கு மாநிலங்களின் பிரதிநிதிகளும், இங்குள்ள பிரச்னைகளை எடுத்துச் சொல்லி, டெல்லியோடு சண்டை போட்டோமானால் அப்போது டெல்லி நிச்சயமாக இறங்கிவரும்" என்று கூறினார்கள்! பக்கத்திலே காமராஜரை வைத்துக் கொண்டு தான் இதைக் கூறினார்!

அமைச்சர் சஞ்சீவி ரெட்டி உபசாரத்திற்காக இதைச் சொல்லி இருக்க வேண்டுமென்றால் "மதராஸ், ஆந்திரா" என்று மட்டும் சொல்லி இருக்கலாமே! ஏன் கேரளத்தையும், கன்னடத்தையும் இணைத்துப் பேச வேண்டும்! ஏன்பக்கத்தில் இருக்கிற மராட்டிய மண்டலத்தை விட்டு விட்டார்?" நாம் நால்வர்" என்று கோடிட்டுச் சொல்லக் காரணம் என்ன? அதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் சுப்பிரமணியத்தின் சிந்தனைக்கு கொஞ்சம்புலப்படும்!

திரு. சஞ்சீவி ரெட்டி காங்கிரஸ்காரர், காமராஜரின் நண்பர்! அவர் கூறுகிறார்" நான்கு மாநிலத்து எம். பி. களும் அடிக்கடி ஒன்று கூடி நம்முடைய பிரச்னைகளை எடுத்துச் சொன்னால் டெல்லி பணியும்" என்று!

இதற்கு காரணம் என்ன? ஏன் இந்த நான்கு மாநிலங்களை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லுகிறார் மற்ற மாநிலங்களை யெல்லாம் விட்டு விட்டு தமிழ், ஆந்திரம், மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மாநிலங்களை மட்டும் சஞ்சீவி ரெட்டி குறிப்பிடக் காரணம் என்ன?

ஆந்திரத்தின் எல்லையிலே ஒரிசா கூடுகிறது, நெளிகிறது கொஞ்சம் குழம்புகிறது! ஆனால் கேரளம் ஒன்றாக இல்லை! பல நூறு மைல்களுக்கு அப்பால் இருக்கிறது! என்றாலும் கேரளத்தை கட்டியணைக்கிறார்! கேரளம், தமிழ், ஆந்திரம், கன்னடம் இந்நான்கையும் தென்னகம் தென்மாநிலங்கள் என்று கூறுகிறார்! பக்கத்திலே இருக்கிற மராட்டியம் ஆந்திரத்தோடு உராய்ந்து கொண்டிருக்கிறது! கேரளத்திற்கும், ஆந்திரத்திற்கும் இருக்கும் தொலைவைவிட, தூரத்தைவிட மராட்டியத்திற்கும், ஆந்திரத்திற்கும் இருக்கும் தொலைவு, தூரம் மிகமிக குறைவாகும்! ஒட்டிக்கொண்டிருக்கிற மராட்டிய மண்டலத்தை வெட்டி விட்டு கேரளத்தை அணைத்துக் கொள்ள காரணம் என்ன?

இந்த நான்கு மாநிலங்களின் நாகரிகங்களும் ஒன்றானது, தொன்மை வாய்ந்தது! வேண்டுமானால் பாசி படர்ந்திருக்கலாம், தூசி படிந்து பளபளப்பை கொஞ்சம் குறைத்திருக்கலாம், கொஞ்சம் மங்க வைத்திருக்கலாம்! ஆனாலும் உள்ளத்திலே எழுந்துள்ள உறவை, உணர்ச்சியைத் தூசுகளாலும் தும்புகளாலும் மறைத்து விட முடியாது! 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சியத்தையும்போக்கி விட முடியாது!

எல்லையைச் சொல்லி முடித்து விட்டார்கள்—சரி! தமிழகத்திலே மட்டும் தானே உங்கள் இயக்கம் இருக்கிறது, ஆந்திரத்தின் ஆதரவு இல்லையே, கேரளத்தில் உங்கள் குரல் கேட்கவில்லையே" என்று அமைச்சர்கள் கூறி வருகிறார்கள்! மற்ற மாநிலங்களில் வளர்ச்சி இல்லாத காரணத்தால் நியாயமான கோரிக்கை, அநியாயமாகி விட்டது! நீங்கள் இப்படி பேசுவதால் எங்களைத் தாண்டி விடுகிறீர்கள் என்றுதான் அர்த்தம்! மற்ற மூன்று மாநிலங்களிலும் உற்சாகமாக வேலை செய்யுங்கள், ஆர்வத்தோடு வேலை செய்யுங்கள், சளைக்காமல் பணி புரியுங்கள்" என்று சொல்வதாகத் தான் பொருள்! "வெகு விரைவிலே மற்ற மாநிலங்களிலும் எங்கள் பணி தொடங்கும், அவர்களுடைய நல்லாதரவையும் பெறுவோம்" என்பதை அமைச்சர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்!

எங்களுக்கு நல்ல பிரச்சார பலம் கிடையாது! வளர்ந்து விட்ட தமிழகத்திலேயே எங்களுக்கு பதிரிகை பலம் கிடையாது! எல்லா பிரச்சார சாதனங்களையும் சர்க்காரே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது! சர்க்காரின் சொந்த விளம்பரத்திற்காகவே பயன்படுத்தப் படுகிறது! திரைப் படம் முழுக்க முழுக்க சர்க்காரின் விளம்பர சாதனமாகிவிட்டது! ரேடியோவைத் திருப்பிவிட்டால், தானே அலறி, ஆடி, ஓடி ஓய்கின்ற வரையில் சர்க்காரின் பிரதாபங்களையே அளந்து கொண்டிருக்கிறது! இப்போது தமிழகத்தில் எல்லா இடங்களிலும் அகில இந்தியா ரேடியோவைப்பற்றி நினைவுக்கு வந்ததெல்லாம் "ஆகாஸ்வாணி" போராட்டத்தினால் தான்! அகில இந்திய ரேடியோவின் பக்கம் போய் பத்து வருடங்களாகின்றன!

திரைப்படம்பொழுதுபோக்கு என்ற நிலை போய்—செய்திப் படம் 1500 அடி 2000 அடி என்று வளர்ந்து நம் உயிரை வாங்கிக் கொண்டிருக்கிறது! முன்பெல்லாம் சண்டைப் படம் 300 அடிதான் இருக்கும்! இப்போது இந்திய சர்க்காரின் செய்திப் படம் 1500 அடி, 2000 அடி என்று வளர்ந்துவிட்டது! பார்க்கின்ற கதை 1500 அடியாகி செய்திப்படம் 18000 அடிக்கு உயர்ந்தாலும் உயரலாம்!

தலைவர்கள் திண்டு தலையணை போட்டுக்கொண்டு சாய்ந்து கிடப்பதையும், பூச்செண்டு விளையாட்டு விளையாடுவதையும் பிரமாதப்படுத்திக் காட்டப்படுவதற்குப்பெயர்தான் செய்திப் படங்களாகின்றன!

இப்போது இங்கே பெரிய மாநாடு நடை பெறுகிறது! இந்தச் செய்தி வானொலியில் வருமா? வராது! திருச்சியில் மாநில மாநாடு நடத்தினோம், மூன்று இலட்சம் மக்களுக்கு மேல் வந்திருந்தனர்! பல தீர்மானங்களை நிறைவேற்றினோம்! வானொலியில் பேச்சில்லை, மூச்சில்லை! இததனைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தடை செய்யப்பட்ட கட்சியா?

சிதம்பரம் இடைத் தேர்தலிலே நம் தலைவர்களெல்லாம் நூற்றுக்கணக்கான கூட்டங்களிலே இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் பேசி வந்திருக்கிறார்கள்! அதைப்பற்றி ஒரு வரி கூட பத்திரிகைகளில் செய்தி இல்லை! பக்தவத்சலம் நம்மைப் பார்த்து "குடுகுடுப்பைக்காரர்கள்" என்று சொன்னால் அந்தச் செய்தி பெரிய அளவில் வெளியிடப்படுகிறது!

நான் இந்து பத்திரிகையில் படித்தேன்—அமைச்சர் சுப்பிரமணியம் தக்க புள்ளி விபரத்தோடு திராவிட நாட்டை மறுத்துக் கூறினார் என்று செய்தி வந்திருக்கிறது!

அன்பழகன் சென்ற கார் காங்கிரஸ்காரர்களால் வழிமறிக்கப்பட்டது என்றவுடன் அந்த செய்தியை சுதேசமித்திரன் பெரிதாக வெளியிடுகிறது! அறிஞர் அண்ணா அவர்கள் சிதம்பரம் தொகுதியில் ஆற்றிய சொற்பொழிவு இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது,

எங்களுக்கு நிதி வசதியும் கிடையாது. இவ்வளவு பெரிய மாநாட்டை, இவ்வளவு பெரிய திடலில் அமைத்து ஏன் கூட்டி இருக்கிறோம். கடற்கரையில் கூட்டினால் எதைப்பேசுவோமோ அதைத்தான் இங்கும் பேசுகிறோம். சென்னையிலுள்ள ஒவ்வொரு வட்டத் தோழர்களும் இந்த மாநாட்டை கூட்ட அரும்பாடுபட்டிருக்கிறார்கள். இந்த மாநாட்டை இங்கே கூட்டியதின் நோக்கம் கட்சிக்கு நிதி சேர்க்கதான். நீங்களும் பணம் தந்து இங்கே வந்து எங்கள் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள், நாங்களோ செங்குட்டுவன் என்ன சொல்லப் போகிறாரோ என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஐந்தாயிரம் என்கிறாரா? பத்தாயிரம் என்கிறாரா? என்ன சொல்லப் போகிறார் என்று எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறோம். எங்களுக்கு இருப்பு கொள்ளவில்லை.

பெரும் தனம் படைத்தவர்கள் நம்மிடம் இல்லை, பெரும் பணம் படைத்த சீமான்களும் நேரடியாகக் கலந்து கொள்ளும் கட்சியும் இதுவல்ல. காங்கிரஸ் கட்சி மாநாட்டில் மட்டும்தான் அவர்கள் நேரடியாக வந்து கலந்து கொள்ளுவார்கள்.

கோவைச் சீமான்களில் சிலர் ஆச்சாரியாரின் கட்சி வெற்றி பெற வேண்டும் என்னும் எண்ணுகிறார்கள். பணம் தருவார்கள், வெற்றி பெற வேண்டும் என்று ஆசைப்படுவார்கள்! ஆனால் அவர்கள் நேரடியாக வர மாட்டார்கள்.

இங்கே பேசப்படுகின்ற கருத்துகளை கர்னாடகத்தில், ஆந்திரத்தில், கேரளத்தில் பேசப்பட்டால் நிச்சயமாக வெற்றி கிடைக்கும், அங்கே உள்ள மக்களும் விழிப்புணர்ச்சி அடைவார்கள். காலம் வரும் அதற்கான பணிகளை நாம் செய்திடவும் தயங்கவும் மாட்டோம்.

தமிழ் நாடு மட்டுமே போதும் என்று சொல்லி இருந்தால் தினத் தந்தி ஆதித்தனின் கூச்சலும், குழப்பமும் இங்கு ஏற்பட்டிருக்காது. அன்றாடம் கடையைக் கட்டி கணக்குப் போட்டுப் பார்க்கின்றவர் ஆதித்தனார்! பொறுப்பற்ற குழப்பத்தில் நாம் இருக்க முடியாது. சில்லறை மனோபாவத்திலுள்ள பொறுப்பற்ற தன்மையாலாலோ நாம் எதையும் விட்டுவிடப் போவதில்லை. நம்முடைய இலட்சியமும் ஒரு நாளும் சிதைந்து போய் விடாது.

நமது தேர்தல் சின்னம் உதய சூரியன், பல பெரிய மலைகளுக்கிடையே உதயசூரியன் எழுந்து வருகிறான். உதய சூரியன் உதித்து வருவதற்த முன்பு இருட்டாகத்தான் இருக்கும்! இருட்டாகத்தான் இருக்கிறது. இது இயற்கையின் நியதி. கடிகாரத்தைப்பார்த்துக்கொண்டே இருக்கிறோம். இன்னும் சில மணி நேரத்தில் ஆந்தையின் அலறலும், கோட்டானின் சத்தமும் நிற்கத்தான் போகிறது. இருள் படர்ந்து கிடக்கும் உலகில் உதய சூரியன் தோன்றினால் ஒளி மயமாகும். எங்கும் காரிருள்போய் பிரகாசமான வெளிச்சம் காணப்படும். எனவே நாம் அவசரக்

17-ம் பக்கம் பார்க்க

ஏய்த்துப் பிழைக்கிறவனுக்குத் தெரிகிற நியாயம் ஏமாளிகளுக்குத் தெரியவில்லையே!

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

காரர்கள் அல்ல. பொழுதே விடியாது என்று நினைப்பவர்களும் அல்ல.

அடுத்தாற்போல், திராவிட நாடு தனியாகப் பிரிந்து கூட்டாட்சி நடத்தினால் பொருளாதாரத்திற்கு என்ன செய்வீர்கள் என்று கேட்கிறார்கள்! "நமது நிதியின் கதி என்ன?" என்று புலம்புகிறார்கள்!

பல கோடி ரூபாய்கள் செல்விட்டுவிட்டு வரும் இன்றைய பொருளாதாரத்தின் நிலை என்ன? அந்தோ இதுவா நம் கதி என்று புலம்ப வேண்டிய நிலையில் அல்லவா இருக்கிறது!

இன்றைய தினம் நாம் டில்லிக்கு வரியாக கொட்டியழும் தொகை எவ்வளவு? நாம் எவ்வளவு தொகை தருகிறோம். அவர்கள் நமக்கு எவ்வளவு தொகையை திருப்பித் தருகிறார்கள். இதை எண்ணிப் பார்த்தால் மன வேதனையாக இருக்கிறது.

எப்போதாவது சுய மரியாதை உணர்ச்சி வருகின்ற நேரத்தில் இதைப் பற்றி நமது அமைச்சர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கிறார்கள். மறுகணமே அதை மறந்து டில்லிக்கு தாசானுதாசனாய் அடிபணிகிறார்கள்.

இதை டில்லியிலே இருக்கிற அமைச்சர் மனுபாய்ஷா உணர்கிறார், "மாநில சர்க்கார் ஏராளமான பணத்தை டில்லி சர்க்காருக்கு கொடுத்துவிட்டு வெறும் பொம்மைகளாக இருக்கிறார்கள். அதிகாரமின்றி, எல்லா அதிகாரங்களையும் டில்லியிடம் ஒப்புவித்துவிட்டு வெறும் அலங்கார பொம்மைகளாக வீற்றிருக்கிறார்கள்" என்று மனுபாய்ஷா சொல்லுகிறார். அவருக்குத் தெரிகிற நியாயம் நமது அமைச்சர்களுக்குத் தெரியாத காரணம் என்னவோ?

எடுத்து செலவு செய்யும் எத்தர்களுக்குத் தெரிகின்ற நியாயம், கொடுத்துவிட்டுத் தவிக்கும் ஏமாளிகளுக்குத் தெரியாத காரணம் என்ன என்பதுதான் நமக்குப் புரியவில்லை

பெரும் தனம் கிடைத்தால் கூட எங்கெங்கோ சென்று மடிப்பிச்சை ஏந்தும் நிலைதானே இன்னும் இருந்து வருகிறது!

தெருவிலே பிச்சை எடுத்துக் கொண்டு திரியும் ஒரு பிச்சைக்காரனுக்கு பல ஆயிரம் ரூபாய் கிடைத்ததாம், அந்தப் பல ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறாய் என்று அவனைப் பார்த்து ஒருவன் கேட்டானாம். ஆயிரம் ரூபாயில் தங்கத்தால் ஒரு திருவோடு செய்துக் கொள்வேன் என்றானாம். பிச்சை எடுத்தவனுடைய புத்தி பெரும் பணம் கிடைத்த பிறகும் போகவில்லை! "அம்மா, தாயே" என்று பிச்சை கேட்கதான் அவன் புத்தி திரும்புகிறது. இப்படி பெரும் பணம் கிடைத்தாலும் திருவோட்டு புத்தி மட்டும் போகவில்லை.

தனி நாடு கிடைத்துவிட்டால் நாம் ஏன் ஒருவரிடம் போய் பிச்சைக் கேட்க வேண்டும்? இன்னும் சொல்லப் போனால் சேலம் ஒரு பெரும் புதையலையே வைத்துக் கொண்டிருக்கிறது. அங்கு கிடைக்காத கனிவளங்களே கிடையாது என்று நிபுணர்களெல்லாம் கூறுகிறார்கள்,

சேலம் என்று சொன்னவுடனேயே நமது அமைச்சர்களின் முகம் சுளித்துக் கொள்ளுகிறது. அவர்களுடைய கண்களுக்கு அரசியல் தெரிகிற அளவுக்கு நாட்டின் வளம் தெரியவில்லை.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயம்கொண்டான் என்னும் ஊரில் 20 அடி ஆழத்தில் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது. இது மட்டும் தோண்டி எடுக்கப்பட்டால் தமிழகத்தின் பொருளாதாரமே மாறிவிடும். நெய்வேலியில் 200 அடி ஆழம் தோண்டினாலும் தண்ணீர்தான் இறைக்க வேண்டி இருக்கிறது.



துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், சம்பத், வி. பி. ராமன், கருணாநிதி முதலியோர் மாநாட்டு மேடையில் அமர்ந்திருக்கின்றனர்!

சென்ற பொதுத் தேர்தலின் போது நமது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் நாமக்கல்லில் பேசிக்கொண்டிருக்கிறார், நாமக்கல் பாதை எங்கும் நாம் வண்ணக் கலரில் போஸ்டர் அடித்து ஒட்டியிருந்தோம் சேலத்து இரும்பைப் பற்றியும், காவிரி வட்ட எண்ணெய்க் கிணற்றைப் பற்றி நாம் போஸ்டரிலே போட்டிருந்தோம்,

நாமக்கல்லிலே பேசிக்கொண்டிருந்த நமது நிதி அமைச்சர், 'என்னய்யா போஸ்டர்? சேலத்து இரும்பு மட்டமான இரும்பு. என்னய்யா காவிரி வட்ட எண்ணெய். புரியவில்லையே" என்று நக்கல் செய்து பேசினார்! நம்மை கிண்டலால் தாக்கினார். "காவிரியாம், வட்டமாம், எண்ணெயாம், கிணறாம், ஊரை ஏய்க்கிறார்கள். அறிஞராம், அவர் எதை அறிந்தவர் என்பதுதான் தெரியவில்லை" என்று கேலி செய்தார்.

1957-ம் ஆண்டில் நக்கல் செய்தவர் 1959-ம் ஆண்டு பத்திரிகை நிருபர்களிடம் 3வது ஐந்தாண்டு திட்டங்களை விளக்கிக் கூறுகையில்—சேலத்து இரும்பு—காவிரி வட்ட எண்ணெய்க் கிணறு என்று—நாம் எந்தப் பதத்தை அன்று உபயோகித்தோமோ அந்த பதத்தை உபயோகித்து—"காவிரி வட்ட எண்ணெய்க் கிணற்றின்மூலம் சென்னை சர்க்காருக்கு நல்ல பலன் கிடைக்கும்" என்று கூறி இருக்கிறார்.

அன்று, நாமக்கல் பாதையில் ஒட்டியிருந்த போஸ்டரைப் படித்து ஞாபகத்தில் வைத்துக் கொண்டு ஆங்கில வார்த்தைக்கு சரியான தூய தமிழை மொழிப் பெயர்த்துச் சொல்லி இருக்கிறார்!

நாம் 1957-ல் சொன்னது அமைச்சருக்கு 1959-ல் தான் புரிந்திருக்கிறது! அமைச்சருக்குத் தெரியாத விஷயத்தை நமது அண்ணா முன் கூட்டியே அறிந்து சொல்லி இருக்கிறார்!

முன்கூட்டியே அறிந்துசொன்னவரை அறிஞர் என்று சொல்லுவதில் என்ன தவறு இருக்கிறது!

இந்த அறிஞருக்கு பூகோளம் தெரியுமா என்று அன்று நக்கல் செய்தவர் தான் இன்று அவர் சொன்ன வார்த்தையையே காப்பியடித்துச் சொல்லுகிறார்!

நான் பத்திரிகை செய்தியொன்றைப் படித்தேன்! அமெரிக்க தூது குழுவினர் தென்னாட்டில் ஏராளமான தொழில் வளம் இருப்பதாகவும், எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் போடத் தயார் என்று சொன்னதாகவும் பத்திரிகையில் படித்தேன்!

இந்தியத் துணைக் கண்டத்தில் தென் பகுதி புறக்கணிக்கப்பட்டிருப்பதாக குருசேவ் கூறி இருக்கிறார்! சேலத்து இரும்பை தோண்டி எடுப்பதனால் 12 கோடி ரூபாய் பணம் தர தயாராக இருப்பதாக சோவியத் சர்க்கார் அறிவித்திருக்கிறது! இந்தச் செய்தி மெயில் பத்திரிகை வெளியிட்டிருந்தது!

நான் பொள்ளாச்சியில் முதல் நாள் பேசுகிறேன்—மறுநாள் நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் பேசுவதாக இருந்தது! அப்போது மெயில் பத்திரிகையில் வந்திருந்த செய்தி அந்த பொதுக் கூட்டத்தில் படித்து காண்பித்து—"மறுநாள் அமைச்சர் சுப்பிரமணியம் இங்கு வந்தால் இதைக் கேளுங்கள்—கேட்டு என்ன பதில் சொன்னார் என்பதை எனக்கு எழுதுங்கள்" என்று சொல்லி விட்டு வந்தேன்!

வெளிநாட்டுக்காரர்கள் நமக்கு உதவி செய்ய முன் வந்தாலும் கேளாச் செவியினராகவே இருந்து வருகிறார்கள்! நமக்கென்று ஒரு தனி அரசு இருந்தால் இந்த நிலை, இந்த கோர நிலை, இந்த அவல நிலை ஏற்படுமா?

"திராவிட அரசு கிடைத்தால் பொருளாதார நிலை என்ன என்பதைப் பற்றி கொஞ்சம் கூட யோசிக்கத் தேவையில்லை!

நாம் சுரண்டப்படுகிறோம் என்பது மட்டுமல்ல — உரிமையை இழந்து நான்காம் தரம், ஐந்தாம் தரமாக நிலையில் தாழ்ந்தும் கிடக்கிறோம்! இதை நான் கற்பனை செய்து, இட்டு கட்டிச் சொல்லவில்லை! அமைச்சர் மனுபாய்ஷாவே அழகாக இதை எடுத்து விளக்கி இருக்கிறார்!

மாநிலங்கள் எலலா அதிகாரங்களையும் மத்திய சர்க்காரிடம் ஒப்புவித்து விட்டு வெறும் பொம்மைகளாக இருப்பதற்கு காரணம் இரண்டு உண்டு என்று அமைச்சர் மனுபாய்ஷா கூறி இருக்கிறார்!

'மாநிலங்களை யூனியன் சர்க்கார் கேவலமாக மதிக்கிறது" இது மனுபாய்ஷா கூறும் முதல் காரணம்!

"மாநில சர்க்காரின் நிர்வாகம் நான்காம் தரம், ஐந்தாம தரம் போவழிகளிடம் இருக்கிறது" இது இரண்டாவது காரணம் என்று கூறுகிறார்! மனுபாய்ஷா சொல்லுகிறார் தலைமை தரமாக இல்லை, நான்காம் தரம், ஐந்தாம் தரம் பேர்வழிகளிடம் தலைமைப் பொறுப்பு இருக்கிறது என்று கூறுகிறார்!

இதை யாரை மனதில் வைத்துக் கொண்டு குறிப்பிடுகிறார்! யாரைப் பற்றி இப்படிப் பேசுகிறார்! நமது காமராஜரையும், சுப்பிரமணியத்தையும் பார்த்து தான் ஐந்தாம் தரம், நான்காம் தரம் பேர்வழிகள் என்று சொல்லுகிறார்!

பம்பாய் மாநிலமும், ஒரிசா மாநிலமும், பீகார் மாநிலமும், மத்திய பிரதேச மாநிலமும் மத்திய சர்க்காரிடம் மண்டியிட்டுப் பிச்சை கேட்கவில்லை! மண்டியிடுவதெல்லாம், பிச்சை கேட்பதெல்லாம், ஆந்திர, கேரள, கன்னட, தமிழ் மாநிலங்களே தவிர வட நாட்டு மாநிலங்கள் அல்ல! இந்தி பேசும் மாநிலங்கள் ஒன்று கூட இப்படி மண்டியிட்டு மடிப்பிச்சை ஏந்துவது

18-ம் பக்கம் பார்க்க

மக்களை வாழ வைக்க அமைச்சர்கள் பணி புரியவில்லை !
தங்கள் பதவியை காத்திட துரோகம் தான் செய்கிறார்கள் !

(17-ம் பக்கத் தொடர்ச்சி)
கிடையாது! இதற்கு காரணம் என்ன? அதிகாரங்கள் அனைத்தும் இந்திப் பேசும் மக்களிடம் குவிந்திருப்பதனால் தான்—அவர்கள் வாழ்க்கையை சுவைத்துக் கொண்டு, வாழ்க்கையின் பலனை அனுபவித்துக்கொண்டு எக்காளம் போட்ட வண்ணம் இருக்கிறார்கள்! எனவே இந்திப் பேசும் மக்களிடம் அடைக்கலம் புகுந்திருக்கும் மத்திய சர்க்காரின் அதிகாரங்களை ஒருநாளும் குறைக்க மாட்டார்கள்!

நாம் எழுப்புகின்ற உரிமைக் குரலை அவர்கள் மதிப்பதே இல்லை? வடவரின் துவேஷப் புத்தியை அடக்கவேண்டும்! வடவரின் துவேஷப்புத்தி என்றவுடன் நம்முடைய அமைச்சர்களுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்துவிடும்! "வடக்கு, தெற்கு என்பது அண்ணாதுரையின் நூதனமான கண்டுபிடிப்பு" என்று கூறுவார்கள்!

இந்தத் துவேஷத்தை வளர்ப்பவர்கள். தூபம் போடுபவர்கள் வடநாட்டுக்காரர்கள்தான்! துவேஷத்தை கிளப்புபவர்களே டில்லியிலே உட்கார்ந்து கொண்டிருக்கும் அதிகார வர்க்கத்தினர்கள் தான்!

வடக்கிலுள்ளவர்கள் எவர் பேசினாலும், எங்கு பேசினாலும், வடக்கு, தெற்கு என்று தான் பேசுகிறார்கள்! வங்கத்தை பெங்கால் என்று தான் சொல்லுகிறார்கள்! மராட்டியத்தை பம்பாய் என்று சொல்லுகிறார்கள்—அதை மேற்கு என்று சொல்லவில்லை! பஞ்சாப்மாநிலத்தைபஞ்சாப்என்று தான் குறிப்பிடுகிறார்கள்! அதற்குதிசையை பெயராக வைத்து அழைக்கவில்லை! தென்னாட்டுப் பிரச்சனைகள் வரும்போது மட்டும் தெற்கு—வடக்கு என்று தான் பேசுகிறார்கள்! இங்குள்ள பகுதிகளின் பெயர்களை குறிப்பிடுவதில்லை! ஆந்திரம் என்றோ, கேரளம் என்றோ, கன்னடம் என்றோ, மதராஸ் என்றோ அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லுவதில்லை! மொத்தமாகச் சேர்த்து (S0uthern States) என்று தான் குறிப்பிடுகிறார்கள்.

காமராஜரின் கண்களுக்கு இது தெரியவில்லை என்று சொல்ல மாட்டோம்! சுப்பிரமணியத்தின் சிந்தனைக்கு இது எட்டவில்லை என்றும் நினைக்கவில்லை! எங்கே இதை ஒத்துக் கொண்டால் "நாற்காலியை விட்டு கீழே இறங்கி விடவேண்டுமோ" என்று தான் அஞ்சுகிறார்கள் !

டில்லி பாரளுமன்றத்திலே எல்லோருமே நேரு அவர்களை பிரமாதமாகப் புகழ்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள் ! நேரு அவர்களின் விரிந்த மனப்பான்மையைப்பற்றி, நேரு அவர்களின் பரந்த கொள்கைகளைப் பற்றி, நேரு அவர்களின் உயர்ந்த நோக்கங்களைப் பற்றி எடுத்துரைத்து விட்டு—"நேரு ஒருவர் தான் இந்தியாவை கட்டிக் காத்துக் கொண்டு வருகிறார்—



கவிஞர் கண்ணதாசன், பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன், அன்பழகன், ஆசைத்தம்பி முதலியோர் மேடையில் வீற்றிருக்கும் காட்சி !

நேரு இல்லா விட்டால் இந்தியா பல துண்டுகளாக பிரிந்து போய் விடும்" என்று கூறி தங்கள் தங்கள் உரையை முடிப்பார்கள் தப்பித் தவறி நாம் அங்கிருந்து விட்டால் காங்கிரஸ்காரர்கள்—அவர்கள் மந்திரிகளானாலும் சரி முதுகைத் தட்டிக் கொடுத்து அப்படியானால் இவர்கள் கட்சி ஜெயித்து விடும் என்று எங்களைப் பாரத்து கூறுவார்கள்!

ரஷ்ய நாட்டிலே துப்பாக்கி முனையால் எப்படியோ பிரிந்து கிடந்தமக்கள் ஒன்றாக இணைத்து விட்டார்கள்! ஆனால் அங்குள்ள 16 அரசு மக்களுக்கும் தனி உடை, தனி உணவு அளிக்கப் படுகிறது ! அங்கே ஒன்றாக இருந்தாலும் அவர் அவர்களுடைய நாகரீகம் சிதைக்கப்படவில்லை!

இங்கே மட்டும் சாப்பாடு முதல், சங்கீதம் வரை ஒன்றாக இருக்கவேண்டும் என்கிறார்கள்! இந்திய சங்கீதம், இந்திய சாப்பாடு, இந்திய மொழி என்ற இருக்கவேண்டும் என்று கூறுகிறார்கள்! எல்லோரும் ஒன்றாக இருந்தால் மொத்தமாக எல்லோரும் சேர்ந்து அமெரிக்காவிடம் பிச்சை எடுப்பதற்கு செளகர்யமாக இருக்குமென்று நினைக்கிறார்கள் போலும்!

ஜெயின் சொல்லுகிறார் எல்லோரும் கோதுமையை சாப்பிட வேண்டுமென்று! கேஸ்கர் கூறுகிறார் ஹிந்துஸ்தானி சங்கிதம் இருக்கும் போது கர்னாடக சங்கீதம் எதற்கு என்று! ஒருமைத் தன்மையை கத்தி முனையிலே காண விரும்புகிறார்கள்! அதிலே தங்கள் ஆதிக்க முத்திரையைப் பொறிக்க ஆதிக்க வெறியர்கள் அரும்பாடுபட்டு வருகிறார்கள்.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு—வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆட்சி புரிந்து கொண்டிருந்த போது—தன்னுடைய பாணியில் உடையை அணிந்தால் மரியாதை யளிப்பான்! தன்னுடைய நாகரீகம் பரவ வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

டெல்லியிலே இருக்கிற ராஷ்டிரபதி பவனத்திலுள்ள சேவகர்கள் அனைவரும்—உணவு பரிமாறுபவன், காவல் காப்பவன், தூண் அசிங்கமாக இருக்கக் கூடாது என்பதற்காக நிற்பவன் எல்லோருமே பழைய காலத்து சமஸ்தான ராஜாக்களை போல் பளபளப்பான வெள்ளை உடையணிந்து, பெரிய தலப்பாகையுடன் நிற்பார்கள்!

"இவர்களெல்லாம் ஏன் இப்படி உடை யணிந்து கொண்டிருக்கிறார்கள்" என்று அங்கே சிலரைப் பார்த்துக் கேட்டேன் ! வெள்ளைக்காரன் இந்த நாட்டு மன்னர்களையெல்லாம் கேவலமாக மதிக்க வேண்டும், மட்டரகமாக எல்லோரும் கருதவேண்டும்! என்று நினைத்து பழைய மன்னர்களின் உடையை சேவர்களுக்கும் கொடுத்தான் என்று பதில் சொன்னார்கள்.

வெள்ளைக்கார ஏகாதிபத்திய வெறியன் என்ன செய்தானோ அதையே இந்த வெறியர்களும் செய்து வருகிறார்கள்.

நமது அமைச்சர்களோ இடி, அடி. உதை பட்டு சுயமரியாதை உணர்ச்சியை இழந்து கிடக்கிறார்கள்.

இப்படி நாம் கூறினால் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் சுப்பிரமணியம்- சுற்றும் முற்றும் பார்த்து விட்டு - யாராவது செண்டரல் சி. ஐ. டி. யிருக்கிறார்களா என்பதை கவனித்து விட்டு—"அப்படி யொன்றும் நான் டில்லிக்கு அடிமையாகக் கிடக்கவில்லை, நான் கௌகத்தி மாநாட்டில் நேருவையே எதிர்த்துப் பேசி விட்டேனே" என்று கூறுவார்.

நேரு முறைத்தால் சுப்பிரமணியம் அழுது கொண்டே பதில் சொல்லுவார்! "ஏன் முறைக்கிறீர்கள், நான் இனி எதுவும் பேச மாட்டேன் என்று தான் பதில் சொல்லுவார்! மாநாட்டில் பந்தக்காலைக் தட்டிக் கொண்டு வேடிக் கைப் பார்த்துக் கொண்டுவந்தவருக்கு இந்த தைரியம் பிறந்திருக்கிறது! அந்த தைரியம் வாழட்டும்.

ஆனால் இன்றைய தினம் உள்ள நிலைமை என்ன?

கேரளத்தை ஆண்டு கொண்டிருந்த கம்யூனிஸ்டு சர்க்காரை எவ்வளவு சுலபத்தில் விரட்டி விட்டார்கள்! பூச்சாண்டி காட்டியே மிரட்டி ஒரு சர்க்காரை வீட்டுக்கு அனுப்பக்கூடு மென்றால் இதை எப்படி சுதந்திர நாடு என்று சொல்ல முடியும்!

நமது அமைச்சர்களெல்லாம் டெல்லியின் ஏஜண்டுகளாக, டெல்லியின் எண்ணத்தை வெளிப்படுத்துபவர்களாகத் தான் இருக்கிறார்கள்! ஆதிக்க மனோபாவம் அங்கே அடிமை புத்தி இங்கே.

சென்னையிலுள்ள அமைச்சர்கள் வெறும் கார்டுன் பிம்பங்களே தவிர வேறு ஒன்றுக்கும் உதவாதவர்கள்!

"தமிழ் நாட்டை தனி உணவு மண்டலமாக்கியே தீருவேன்" என்று பக்தவத்சலம் முழங்கித் தள்ளினார் எஸ். கே. பட்டேல் "முடியாது, முடியாது" என்று கூறி விட்டார்! மானமுள்ளவர்களாக இருந்தால், சுயமரியாதை உணர்ச்சி உள்ளவர்களாக இருந்தால் உடனே ராஜினாமா செய்திருக்க வேண்டாமா? அடிமை புத்தி படைத்த அமைச்சர்களுக்கு இதைப் பற்றி எத்தனை தரம் கூறினாலும் எங்கே உறைக்கப் போகிறது.

இப்படிக் கூறுவதால் அமைச்சர்களை இழிவு படுத்துவதாகச் சொல்லுவார்கள்! நாங்கள் ஏன் அமைச்சர்களை இழிவு படுத்த வேண்டும் ! ஒரு பத்து பேரை இழிவுபடுத்திப் பேசுவதால் என்ன பிரயோசனம் கிடைக்கப் போகிறது? அடிமை புத்தியை விரட்டியடித்து நாட்டின் நலத்திற்காகப்பாடுபடவேண்டும்என்பதுதான் எங்கள் எண்ணமே தவிர யாரையும் இழிவு படுத்த வேண்டும் என்பதல்ல,

இந்திய சர்க்கார் செய்திருக்கிற ஊழல்களைப் பற்றி சொல்ல வேண்டுமானால் ஒரு கதையே சொல்லலாம்.

ஜீப்கார் வாங்கியதில் ஊழல்! பழுதுபட்ட யந்திரங்களை கொடுத்து ஏமாற்று வித்தை செய்த விந்தை! யார் அந்த ஊழலுக்குள் காரணம்? எச். எம். பட்டே அதற்குப் பொறுப்பாளியல்லவா? ராணுவத்திற்காக வாங்கப்பட்ட ஜீப்கார்கள் பம்பாய் நகரத்திற்கு வரவே மறுத்து விட்டன.

வாங்கப்பட்ட வெடி மருந்துகளும் அண்ணல் காந்தி பிறந்த நாட்டிற்கு வந்தவுடன் "நாங்கள் வெடிக்க மாட்டோம்" என்று கூறி அகிம்சாமூர்த்திகளாக மாறி விட்டன.

இந்த ஊழல்களையெல்லாம் செய்து விட்டு நம்மை வேறு

19-ம் பக்கம் பார்க்க

18-ம் பக்கத் தொடர்ச்சி

துரோகிகள் என்று தூற்றுகிறார்கள்.

இலங்கைத் தீவிலே தமிழர்கள் விரட்டப்படுகிறார்கள், வாழ வசதியின்றி தவிக்கிறார்கள் இதை கேட்க ஆளில்லை! அங்கே, தமிழர்கள் அடியும், உதையும் பட்டு கண்ணீர் வடிக்கிறார்கள்! இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த ஒத்திகை நாடக மலேயா, பர்மா முதலிய இடங்களில் ஆரம்பமாகக் கூடும்! நமக்கென்று ஒரு தனி அரசு இருந்தால் இந்த இழிநிலை ஏற்பட்டிருக்குமா?

டெல்லியிலே அமைக்கப்பட்டிருக்கிற அரசு ஓர வஞ்சனையில் அமைக்கப்பட்டிருக்கும் அரசாகும்.

நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக அமைந்த அரசானால் இலங்கையில் தமிழர்களுக்கு இந்த கதி உண்டாகுமா? பெரியாரால் பச்சைத் தமிழன் என்று வர்ணிக்கப்படுகிற காமராஜர் இதைப் பற்றி எண்ணியாவது பார்த்ததுண்டா?

நமது தாயகத்தில் எல்லா வசதிகளும் இருக்கின்றன! அதை நம் நாட்டு மக்கள் அனுபவிக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய ஆசையாகும்! மீண்டும் திராவிடத்திற்கு முடி சூட்டும் பணியில் தான் தி.மு.க. ஈடுபட்டுள்ளது! அந்தத் திருப்பணி தான் திராவிட அரசு அமைப்பது! நம்முடைய காலத்திலேயே இதனைச் செய்து முடிக்க வேண்டும். அது நமக்கு மட்டுமல்ல, நம் பின் சந்ததிகளுக்கும் பயன்படும் என்று கூறி—திராவிடம் மலரட்டும், திராவிட அரசு அமையட்டும் என்று சொல்லிக் கொண்டு விடை பெறுகிறேன்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

நெடுஞ்செழியன் ஆகியோர் நமது எதிர்காலப்பணிகளுக்கான திட்டங்களையும், அறிவுரைகளையும் புகல்வார்கள். மற்றும் கழகத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டு திட்டங்கள் வகுத்துக் கொடுக்கவிருக்கும் இந்த மாநாடு வரலாற்று புகழ் பெற்றதாக மாறக்கூடும்.

பல்வேறு தொல்லைகளையும் பொருட்படுத்தாமல், இளஞ்சேய்களுடன் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ள தாய்மார்களே! திராவிடப் பெருங்குடி மக்களே! உங்கள் அனைவரையும் "வருக, வருக" வென அன்புடன் வரவேற்கிறேன். எல்லோரும் வாருங்கள். வந்திருந்து, மாநாட்டுக்கு— கழகத்தின் நல்லதோர் பணிக்கு வெற்றி தேடித் தாருங்கள் என்று மீண்டும் மீண்டும் உங்களை அன்புடன் வரவேற்கிறேன்!

"வாழ்க திராவிடம்"

30-10-59 முதல்

சென்னை மற்றும் தென்னாடெங்கும்

விநியோகஸ்தர்கள் :

* சென்னை நகரம்: M/s. சுப்பு & கோ., (பி)லிட்., சென்னை-17. * தென் ஆற்காடு, வட ஆற்காடு & செங்கல்பட்டு: M/s. ஸ்ரீ நடராஜா பிலிம்ஸ், சிதம்பரம். * மதுரை, ராமனாதபுரம் & திருநெல்வேலி: M/s. செட்டியார் பிலிம்ஸ் (பி) லிட்., மதுரை. * திருச்சி & தஞ்சாவூர்: M/s. செட்டியார் பிலிம்ஸ் (பி) லிட்., திருச்சி. * கோயமுத்தூர் & நீலகிரிஸ்: M/s. மனோன்மணி பிக்சர்ஸ், திருப்பூர். * சேலம் ஜில்லா: M/s. திலகம் பிக்சர்ஸ், நாமக்கல். மைசூர்: M/s. ஜகத் பிக்சர்ஸ், பெங்களூர்-9. * மலபார்: M/s. ஜியோ பிக்சர்ஸ், கோட்டயம். *இலங்கை. M/s. சிலோன் என்டர்டைன்மெண்ட்ஸ் லிட்., கொழும்பு-3. * எப். எம். எஸ் : M/s. ஷா பிரதர்ஸ், சிங்கப்பூர்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ, கல்விப் பிரகாசம் பிரஸ், 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.

Regd. No. 7074

மாலைமணி

ஆசிரியர் : பி. எஸ். இளங்கோ

மாணவப் பருவத்தில் நமது அண்ணா